# புரட்டப்படாத பக்கங்கள்



**மட்டுநகர் கமல்தாஸ்**

# புரட்டப்படாத பக்கங்கள்

## (கவிதைத் தொகுப்பு)

மட்டுநகர் கமல்தாஸ்

பட்டிப்பளைப் பிரதேச கலை, இலக்கிய சமூக அபிவிருத்தி ஒன்றியம்,
மட்டக்களப்பு.

புரட்டப்படாத பக்கங்கள் * கவிதைகள் * ஆசிரியர்: மட்டுநகர் கமல்தாஸ் * © ஆசிரியருக்கு * முதற்பதிப்பு : ஆகஸ்ட் 2017 * வெளியீடு : பட்டிப்பளைப் பிரதேச கலை, இலக்கிய சமூக அபிவிருத்தி ஒன்றியம், மட்டக்களப்பு. * அட்டைப்படம் : திரு.ச.துஷான் * அச்சுப்பதிப்பு : ஷெரோணி பிரிண்டர்ஸ் கூழாவடி, மட்டக்களப்பு. 065-2228660

*Puratapadatha Pakkangal * Poems * Author : Mattunagar Kamalthas * ©Author * Languagee : Tamil * First Edition : August 2017 * Size : A5 * Paper : 70 Bank * Pages : (xvi) + 84 * Price : 300 * ISBN 978-955-38493-0-4*

*Published by Paddipalai Area Arts Literature Social Development Organization, Batticaloa. * Cover Design : Mr.S.Thushan * Printed by Sheroni Printers, Koolavady, Batticaloa. 065-2228660.*

இந்நூல்

போர்க்காலத்தில்

மண்ணில் விதையாகிய

உறவுகளுக்கு .....

# முன்னுரை

மட்டுநகர் கமல்தாஸ் என்ற பெயர் பலராலும் அறியப்பட்டதொன்று. பத்திரிகை, முகநூல், வானொலி, சஞ்சிகை முதலான ஊடகங்களில் தொடர்ச்சியாகக் கவிதைகளை எழுதி வருகின்ற ஒருவராக இவர் இருப்பது இதற்கான அடிப்படைக் காரணமாகும். மட்டுநகர் கமல்தாஸ் மட்டக்களப்பு படுவான்கரைப் பெருநிலப்பரப்பின் ஒரு துருவமாயுள்ள பட்டிப்பளைப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட முதலைக்குடாக் கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். பணிந்தொழுகும் குணமும் அடக்கமும் உடையவர். தான் காணுகின்ற சமூகக் கொடுமைகளை, ஒடுக்குதல்களை பொறுத்துக் கொண்டிராது அவற்றுக்கெதிராக தன்னுணர்வுகளை வெளிப்படுத்தப் பழகிக் கொண்டவர். தான் சார்ந்த சமூகத்தை நேசிக்கின்றவர். துணிச்சல் கொண்டவர். இவர் குறிப்பிட்டதொரு காலப்பகுதியில் எழுதிய கவிதைகளில் ஒரு தொகுதி "புரட்டப்படாத பக்கங்கள்" என்ற தலைப்பில் நூலாக வெளிவருவது அவருக்குமட்டுமன்றி எங்களுக்கும் மனமகிழ்ச்சியைத் தருகின்றது. இவரது கவிதைகளை வெளியிடுவதால் பட்டிப்பளைப் பிரதேச கலை இலக்கிய சமூக அபிவிருத்தி ஒன்றியம் பெருமைபெறுகின்றது.

கற்பனையைக் கவிதையாக்கிய காலம் கழிந்து விட்டது. நாளாந்தம் சமூகக் கொடுமைகளும் ஒடுக்குதல்களும் தலை தூக்கி, இவற்றையே எழுது எழுது என்று தூண்டும்போது அவற்றை மீறிச் செல்லமுடியாதவர்களாக எழுத்தாளர்கள் உள்ளனர். இதற்கு இவரும் விதிவிலக்கல்ல. போர்க்கால அவலங்களையும் போருக்குப்பின்னரான காலத்து அசாதாரண நிலைமைக-ளையும் கமல்தாஸ் துணிச்சலோடு பேசமுனைந்துள்ளார். இவரது 'எங்களுக்காகவும் பேசுங்கள்' என்ற கவிதை யுத்தத்தின் இறுதி நாட்களில் நடந்த அவலங்களை எடுத்துக்கூறி அவற்றுக்கு நீதியை எதிர்பார்த்து நிற்கின்றது. அக்கவிதையின் பின்வரும் வரிகள் கவனிக்கத்தக்கவை:

மானமென்ற ஒன்றுக்காய்
மடிந்த பெண்ணின்
உடலை நிர்வாணப்படுத்தி
புகைப்படங்கள் எடுத்து
புன்னகைத்தார்கள்.
உயிர் தப்பி வந்த பெண்களைத்
தெரியாத பாசையில் ஏசினார்கள்

தாங்கிக்கொண்டோம்.
வெறியாட்டமாடி எங்கள் வாழ்வை
பலியாக்கினார்கள்
இன்றுவரைக்கும் அழுகின்றோம்.
எங்களுக்காகக்
கொஞ்சம் பேசுங்களேன்.

போர்க்காலத்திலும் அதன் பின்னரும் பெண்கள் பாதிக்கப்படுவது தொடர்ந்தவண்ணமேயுள்ளன. அவ்வகையில் பெண்களுக்கெதிரான வன்முறைகள் பற்றியும் இவர் பேசத்தவறவில்லை. "அன்று வித்தியா இன்று சேயா" என்ற கவிதையில் வரும் பின்னுள்ள வரிகள் கமல்தாஸின் துணிச் - சலையும் அக்கிரமத்தை எதிர்க்கின்ற குணத்தினையும் பறைசாற்றுகின்றன:

முள்ளிவாய்க்காலில்
பரவிய குருதியை
அள்ளிப்பருகிய
மூடோரின் இனத்தோனே
உங்கள் மனையில் பிஞ்சுகள்
மிச்சமேதும் இருக்கிறதா?

மனிதனை மனிதனாய் மதித்ததினாலே
மதிகெட்டோரின் இன அழிப்பில்
தமிழினமே அழிந்தது;
இல்லையெனில்
பெரும்பான்மை இனமே பெரிதாய் அழிந்திருக்கும்.
பேச நாதியின்றி நாடு நாடாய் அலைந்திருக்கும்.

மொழிப்பற்று, நாட்டுப்பற்று, சமூகப்பற்று என்று பல நிலைப்பட்ட வகையில் மட்டுநகர் கமல்தாஸின் கவிதைகள் வெளிப்பட்டு நிற்கின்றன. இச்சிறுதொகுப்பினை வாசிக்கின்றபோது பல நினைவுகள் நிச்சயம் எழும். அந்நினைவுகள் எங்களுக்கு கடந்த காலத்தைக் காட்சிப்படுத்தும். சாட்சிப் - படுத்தும். மொழியை மேலும் மேலும் செம்மைப்படுத்தி எதிர்காலத்தில் இவர் பல கவிதைகளை எழுதி வெளியிடவேண்டுமென்று வாழ்த்துகின்றேன்.

**கவிஞர் மேரா**
தலைவர்,
பட்டிப்பளைப் பிரதேச கலை, இலக்கிய
சமூக அபிவிருத்தி ஒன்றியம்,
மட்டக்களப்பு.

# அணிந்துரை

கவிதை என்பது கலையின் விதை; உள்ளத்து உணர்வுகளை உருக்கிப் பதமாக்கி உலவ விடும் ஒரு வகை ஞானம் தான் கவிதை. இதனால்தான் "கலைகளின் அரசி" என்று கவிதைகளைச் சொல்கின்றார்கள் நவீன மாற்றம் போலவே கவிதைகளும் காலத்துக்குக் காலம் பரிமாணத்தைக் காட்டத் தவறவில்லை. பொதுவாக கவிதை வடிவங்கள் செய்யுள், கவிதை, புதுக்கவிதை, பின் நவீனத்துவக்கவிதை, என்று வகைப்படுத்திக் கூறுகின்றார்கள். இன்றைய நவீன இலக்கிய வல்லுனர்கள். ஆனாலும் கவிதையின் உள்ளார்ந்த கருத்துத் தொனிப்பும் கருவும் மாறுவதில்லை. இலக்கியம் என்பது ஒரு காலத்தின் பதிவு. வாழ்கின்ற மக்கள் சமூகத்தின் மனச்சாட்சியாக பேசி நிற்கும் இலக்கிய வடிவங்களுக்குள் கவிதைக்கு ஓர் தனிச்சிறப்பு இருக்கின்றது.

கவிஞர்களாக யாரும் பிறப்பதில்லை. பல கவிஞர்களை கலை விற்பனர்களை சமூகம் உருவாக்குகின்றது என்பது தான் உண்மை.

"புரட்டப்படாத பக்கங்கள்" என்ற இந்த கவிதை நூலை படைத்திருக்கின்ற இளவலும் எனது அன்புத் தம்பியுமான மட்டுநகர் கமல்தாஸ் அவர்களின் வரிகளை ஒவ்வொன்றாய்ச் சுவைத்தேன். "மீன்பாடும் தேனாடு" என்றும் "வீரத்தின் விளைபூமி" என்றும் போற்றப்படும் எமது மட்டக்களப்பு மண்ணின் வாசம் இவரின் வரிகளில் தெறிக்கின்றது.

"வீரம் விளைபூமி எங்கள் மட்டக்களப்பு
கோடி அழகல்லோ இங்கு கொட்டிக்கிடக்கு"

என்ற ஒரு தமிழ் கவிஞனின் பாடல் வரி என்னை சில வருடங்களுக்கு முன் அழைத்துச்சென்றது. கமல்தாஸின் வரிகளைச் சுவைத்த போது ஆரம்பத்திலேயே என் தாய்த் தமிழுக்காக எனத் தொடங்கி தனது பேனாவிலே தமிழை அழகுற நிறுத்தியிருக்கின்றார்.

"எம்மை அழிக்க நன்நூலை எரித்தான்
அனைத்தையும் காக்க ஒருவன் அவதரித்தான்"

எமது யாழ் நூலக அழிப்பையும் எமது ஆண்டவரின் அவதாரத் -தையும் அழகுற பதிவிடுகின்றார். உண்மைதான். தமிழர்களை கடவுள் தான் காக்க வேண்டும் என்று கல்தோன்றி மண்தோன்றா முன் தோன்றிய எம் தமிழில் சிறப்பான பண்பாடு, கலாசார விழுமியங்கள் பலவற்றைத் தொலைத்து விட்டு நாம் இன்று தவிக்கின்றோம். நவீன காலத்து நவ நாகரிக மோகத்தில் சிக்குண்டு எம் அடையாளங்கள் பலவற்றை எம்மையறியாமலே இழக்கின்றோம். அது போல பெண்கள் எம்மினத்தின் மையத்தூண்கள். இவர்களில் தான் எமது இனத்தின் பெருமையும், பெறுமதியும் இருக்கிறது. அதை அவர்கள் உருவாக்க வேண்டுமென்று இவர் ஆலோசனை வழங்குவது சிறப்பு.

"பண்பாடு இழந்து எம் பரம்பரை வளம் பெறாது"

என வரும் இவரின் வரிகள் தரமானவை. இது போலவே காமப்பசி கொண்ட காடையருக்கு இரையான பள்ளி மாணவி வித்தியாவின் படுகொலை எம் உயிரைக்கூட ஆட்டிவைத்தது. இன்று வரை மறையாத கறையாக வேதனைச்சின்னமாகவே எம் மனமெங்கும் வாழ்கின்றது அத் துயரச்சம்பவம். அதை கவிஞர் கமல்தாஸ் உருக்கமாகவும், கோபத்து -டனும் பதிவிடுகின்றார்;

"கழிப்பறையில் பிறந்தவர்கள்
கற்பழித்த காடையர்கள்"

என தனது கோபத்தைக்காட்டி ,

"அள்ளி நீர் பருக கரமின்றி
காமுகன் திரிவான்
கொள்ளி வைக்க யாருமின்றி
படுக்கையில் மலம்போய்க் கிடப்பான்"

என கயவரை நோக்கி தனது சாப வரிகளைச் சமர்ப்பணம் செய்கிறார்.

"எப்படி மறப்போம்" என்ற கவிதையில் எம்மினம் கண்ட கசப்பான கதைகளை சொல்லத்துடிக்கின்றார். அது போலவே "எங்களுக்காவும் பேசுங்கள்" என்ற கவிதையில் என்னை முள்ளிவாய்க்கலுக்குள் மூழ்க வைத்து விட்டார் என் பேனாவும் கொஞ்சம் கொதிப்பது புரிகிறது .

"மானமென்ற ஒன்றுக்காய் மடிந்த பெண்ணின்
உடலை நிர்வாணப்படுத்தி
புகைப்படம் எடுத்து புன்னகைத்தார்கள்"

நிதர்சனமான வரிகள் அம்மனத்தில் ஆனந்தம் கொண்ட அரக்கர்களை எப்படி மன்னிப்போம் என்பது போல இவரின் கொதிப்பு கவிதையாகிறது. "புரட்டப்படாத பக்கங்கள்" என்ற கவிதையின் தலைப்புத்தான் இந்தநூலுக்கு இடப்பட்டிருக்கின்றது. வெளியுலகுக்கு செய்தியாகவும், புதுமையாகவும் தெரியும் தமிழரின் அகதிமுகாம் வாழ்க்கையைப் பற்றி ஆதங்கமாகவும் சுருக்கமாகவும் குறிப்பிடுகின்றார். ஆணை கட்டி போரடித்து ஆண்ட தமிழினம் வாள் கொண்டு போர்கண்ட வல்லமை இனம், மார்பு தட்டி உலகை மருளச்செய்த வீரப்பரம்பரை மௌனிக்கப்பட்டு அல்லது அழிக்கப்பட்டு, அவலப்பட்டு தவித்த போது கூண்டுக்குள் சிறை வைத்து சிரித்தன மெனிக்பாம், முட்கம்பி முகாம்கள். அந்த முகாம்களின் முட்கம்பி பலவற்றின் முற்றுகைக்குள் அகப்பட்ட ஆயிரமாயிரம் கருப்பறைகளில் நானும் ஓர் சிறு பறவை. அதனாலேயே இந்த வரிகளின் வலிமை புரிகின்றது .

"வன விலங்கினையென்று
சுற்றிவளைக்கப்பட்ட
முட்கம்பிகளுக்குள் முடக்கப்பட்டு வாடும் ஓர் இனம்"

அவலமும். ஆதங்கமும் கவியாக மலர்ந்திருக்கின்ற து.

இவருடைய கவிதைகளில் ஒரு சிறப்பு இருக்கின்றது; என்னவெனில் ஏராளமான கவிதைகள் அனுபவத்தின் மூலம் வந்தவைகள். உண்மைத்தன்மை நிரம்பிய உணர்வுகளின் தொடுப்பாக உள்ளன.

வெளிநாடு எனும் பலிநாடுகளில் எம்மவர்கள் பலரின் மனவுளைச்சல்களை இவர் பக்குவமாய் பல கவிகளில் சொல்லுகின்றார்.

இக்கரைக்கு அக்கரை பச்சையென படையெடுத்தவரும் பாதுகாப்பின்றி தஞ்சம் புகுந்தவரும், வறுமையால் வழியனுப்ப பட்டோரும் அங்கு படும் பாடுகளை வாழ்வு தரும் மனக்கவலைகளும் கமலதாஸின் கவிதைகளில் படமாக படர்வதை உணர முடியும்.

உதாரணமாக "அம்மாவின் குரல்" , "வெளிநாட்டுக்காரன்", "எம் ஏக்கம் நிறைவேறுமா?" போன்ற பல கவிதைகளைச் சுட்டிக்காட்டலாம்.

அதுபோல எம் மக்களின் சுபீட்சமான வாழ்வு மலருமென ஏங்கும் மனம் கொண்டவர் என்பதை பெரும்பாலான கவிதைகளில் வெளிப்படுத்துகின்றார்.

எல்லாள மன்னன் என்ற கவிதையில் இவர் குறியீடாக எல்லாளனை குறிப்பது போலவும் எண்ணலாம்.

"எல்லாளன் எங்கள் குல மன்னன்
சொல்லால் வீரம் புகட்டாது
வில்லால் வீரம் புகட்டியவன்"

என ஆரம்பிக்கும் வரிகள் சரித்திரத்தை எந்த சந்ததியும் ஒதுக்கிடாது என வலிமைப்படுத்தி சொல்வது சிறப்பு. கவிதைகளில் ஆங்காங்கு காதல் உணர்வுகளும் துள்ளித்திரிந்து அழகூட்டுவதையும் அவதானிக்க முடிகின்றது.

அதிசயமான காதல், என் இனியவளின் பாசம், மர்மமான அவள் காதல், காதல் கைபேசி , காதலித்துப்பார் என உணர்வுகள் பல கவிதை அலைகள் உணர்வு கரைய முத்தமிட்டிருக்கின்றன .

இவரின் பல வரிகளில் சமுகத்தின் மீதான சாடல் வெளிப்படுவதை அவதானிக்க முடியும். உதாரணமாக புதினப்பொருளாக பாதையில் பாவை என்ற கவிதையால் நவீன பெண்களின் நவநாகரிக உடையணிவதை விமர்சிக்கின்றார். இரகசியமாக,

"மார்பு பக்கத்தை மட்டும் கவனமாக மறைத்திருக்கிறாள்
பாவம் இடையை மறைக்க மறந்து விட்டாள் போலும்"
பிச்சைக்காரனும் அந்த பக்கத்தை
மிச்சம் வைக்காது வாங்கிப்போகிறான்"

என சாதாரண மனக்கொதிப்பை வரிகளில் தூவி விடுகின்றார். உண்மையிலேயே இது தெரிவிக்கப்பட வேண்டிய நல்ல கருத்து. எமது பண்பாட்டு விழுமியங்களை பாதுகாப்பது கடமையல்லவா?

தம்பி மட்டுநகர் கமல்தாஸ் ஈழத்துத் தமிழ் இலக்கியத்தில் கால்பதிக்கின்றார். ஒரு கலைஞனாக, கவிஞனாகத் தன்னை அடையாளப்படுத்தி இன்று பயனுள்ள ஓர் பொக்கிஷமான கவிதைத் தொகுப்பை தருவது எமக்கு பெருமையளிக்கின்றது .

தம்பி கமல்தாஸ் அவர்கள் தமிழுணர்வு அதிகம் கொண்ட படைப்பாளி. அத்தோடு சமூகப்பொறுப்புள்ள இளைஞன் என்பதை தனது வரிகளின் மூலம் வலிமைப்படுத்தி சொல்லி விட்டார் .

மட்டகளப்பு அமிர்தகழி பெற்ற மகத்தான கவிஞரும் தமிழர்களின் மதிப்புக்குரிய அறிஞருமான உணர்ச்சிக் கவிஞர் காசியானந்தன் ஐயாவின் வரிகள் இன்னும் எம்மண்ணில் குரலாய் ஓங்கி ஒலித்த வண்ணம் இருக்கின்றது. அதுபோல வளர்ந்து வரும் மட்டுநகர் கமல்தாசும் தனது தேடலையும், வாசிப்புக்களையும் அதிகரித்து கவிதைகளை மெருகூட்டி வளர்ச்சிப்பாதையின் சிகரத்தை அடைவார் என்ற நம்பிக்கை எனக்கிருக்கின்றது.

கிழக்கு மண்ணின் இளவல் எதிர்காலத்தில் கலைவானில் பிரகாசிக்கும் நட்சத்திரம் என்பது உறுதி .இத்தொகுப்பு வெற்றி பெறவும் தம்பி தொடர் வெற்றிப்பாதையில் வளம்பெறவும் மனம் நிறைந்த வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

“விலை கேட்காதே
கலையை வளர விடு
தலைகள் கொடுத்தேனும்
தமிழை வாழ வை”

“கவிப்பிரதீபா”
“தமிழ்சுடர் பாவரசு”
**வன்னியூர் செந்தூரன்**
இயக்குனர்
செந்தணல் வெளியீட்டகம்
ஒட்டுச்சுட்டான்,
வன்னி.

# வாழ்த்துரை

புரட்டப்படாத பக்கங்கள் கவிநூல் புதிய பாடுகளையும் பாடுகிறது.

மட்டுநகர் கமல்தாஸ் தமிழாய் வாழ்ந்து கரைந்துள்ள கவிதைச் சோலைக்குள் மீண்டுவரமுடியாத் தூரம் பயணம் போனேன்.

“பல்லாயிரம் பாவலர்களில்
நான் ஒரு சொல்லாயிருப்பேன்!
என் தாய்த் தமிழுக்காக!
என் தாய்த் தமிழுக்காக!”

என்று அவர் சத்தியம் செய்யும்போது என் தமிழே என்று அவர் தம் எழுதுகரங்களை முத்தமிடத் தோன்றுகிறது.

கவிஞர் கமல்தாஸ் பாடாமல் போன சேதியேதும் உண்டோ என்று தேடவேண்டியுள்ளது. அவர்தம் கவித்தொகுதியில், புங்குடுதீவு பெற்ற மகள் வித்தியா சதியினில் விதையானபோது இப்படிச் சபிக்கிறார்.

“இந்த நாசம் பெரும்
சேதத்தை தரும்
உன்னை பலி தீர்த்தவர்கள்
விழியின்றிப்போவார்கள்
வாழ வழியின்றி அலைவார்கள்
அள்ளிநீர் பருக கரமின்றிக்
காமுகன் திரிவான்
கொள்ளிவைக்க யாருமின்றி
படுக்கையில் மலம் போய்க்கிடப்பான்”

இந்தப் “புரட்டப்படாத பக்கங்கள்” என்னும் கவிதை நூலைச் சிலமுறை அப்படியே வாசித்தால் தமிழின் சொல்லாட்சி ஒருவரைப் பற்றிக்கொள்ளும், மட்டக்களப்பிலிருந்து மத்திய கிழக்குக்கு கவிஞர் கமல்தாஸ் சென்றாலும் மொழிமேல் அவர் கொண்ட காதல் அந்தக் கட்டிடக் காட்டுக்குள் இருந்தும் கவிமழையாய்க் கொட்டுகிறது.

வாருங்கள் தமிழ்ச் சொந்தங்களே! கவிஞரையும், நூலையும் கைகோர்த்து வாழ்த்துவோம். வரவேற்போம்.

-கல்லாறு சதீஷ் -
08.03.2016.

## புரட்டப்படாத பக்கங்களிருந்து எனது பக்கம்

"தமிழை அழிக்க வருவோரின்
பெரும் போர் புரிவேன்
மரணமென்றாலும் மகிழ்வோடு ஏற்பேன்
என் தாய்த்தமிழுக்காக"

கலையை வளர்ப்பதற்கு இப்போது தான் உலையை வைத்தி - ருக்கின்றேன். அவை பதமாகி சாதமாகுவதற்கு பல பொறுமைகள், காத்திருப்புக்கள் அத்தோடு அனுபவங்கள், அவமானங்கள், ஏமாற்றங்கள் அதிலிருந்து புறப்பட்ட எண்ணக் கதிர்களை புரட்டப்படாத பக்கங்கள் என்ற தொகுப்பாக அறிமுகம் செய்கின்றேன்.

நான் எழுதுவது கவிதைகளா? என எனக்குள்ளே கேள்வி எழுவதுண்டு உங்களிடமும் அதை வினாவுகின்றேன். பலர் என் கவிதைகளை பார்த்தவுடன் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் கூறி ஊக்கமளித்திருக்கின்றார்கள்.

பல கவிஞர்களின் வாழ்த்துக்களும், பாராட்டுக்களும் இருக்கின்ற வரை மலை இடுக்குகளில் விழுந்தாலும் இந்த விதை விருட்சமாக வளரும் என்பதில் ஐயம் எனக்கில்லை.

சிறுவயதிலிருந்து பத்திரிகை, கவிதைப் புத்தகங்கள் வாசிப்பதை பழக்கமாகக் கொண்டவன். ஆதலால் அதில் வரும் கவிதைகளை வாசிக்கும் போது எப்படி கவிதை எழுதுகின்றார்கள், எங்கே தேடி அழகான வார்த்தைகளை எடுக்கின்றார்கள் என பொறாமைப்படுவேன். என் மனதைத் தொட்ட கவிதைகள் என்னையும் கவி எழுதத் தூண்டியது. தூங்கும் போது கவிதைகள் சிந்தனையில் மோதும். காலையில் காணாமல் போய்விடும். தூங்கும் நேரத்தில் குறிப்போடும் பேனாவுடனும் தூங்கச் செல்வேன். அப்போது எழும் வார்த்தைளை குறித்து வைப்பேன் அதிலிருந்து பல பக்கங்கள் எழுதி விட்டேன். எமது இனத்தின் அவலக்குரல்களை நாங்கள் உள்ளுக்குள்ளே அழும் வார்த்தைகளைக் கவிதையாக வெளிக்கொண்டு வர முயற்சித்தேன். எனது கவிதைகள் சக்தியின் முத்துக்கள் பத்து என்ற நிகழ்வில் அரங்கேறியுள்ளன.

வீரகேசரி வாரமலர், தினக்குரல், சுடர் ஒளி, தமிழ்த்தந்தி, ஜனனி வார இதழ், தமிழகத்தில் வெளிவரும் பாக்யா வார இதழ், மலேசியாவில் வெளிவரும் மன்னன் இதழ் ஆகியவற்றில் எனது ஆக்கங்கள்

வெளிவந்திருக்கின்றன. அவர்கள் ஊக்கமளித்திருக்கின்றார்கள். அத்தனை ஆசிரியர்களுக்கும் மகிழ்ச்சியோடு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

"உயிர் பிரியலாம்
உயிரிலிருந்து உதிர்ந்த வார்த்தைகள்
என்றோ ஒருநாள் உயிர்பெறும்"

என்னைக் கவியெழுத ஊக்கம் கொடுத்த அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகள். உங்களுடைய பாராட்டுக்களும், வாழ்த்துக்களும், விமர்சனங்களும் எனது எழுத்துப் பயணத்தில் இருக்க வேண்டுமென்பது எனது பெரும் அவா.

எனது கவிதைக்கான ஆசியுரையினை எனக்கு மிகவும் பிடித்த அவரின் குரலில் கவிதையைக் கேட்டால் தானாக பேனா எழுந்து நிற்கும் அப்படியான கவிதைக்கான குரல் வளம் அமைந்த கவிப்பிரதீபா, தமிழ்ச்சுடர் பாவரசு என்னும் சிறப்புப் பட்டங்களுக்குரிய கவிஞர் வன்னியூர் செந்தூரன் அவர்களுக்கு எனது நிறைவான நன்றிகள். வாழ்த்துரையை கேட்டதும் எந்தவிதமான சங்கடங்களுமின்றி எழுதிக்கொடுத்த எனது மனம் கவர்ந்த கவிஞர் கல்லாறு சதிஸ் அண்ணா அவர்களுக்கு உளமார்ந்த நன்றிகள். எனது கவிதைகளை நூலாக வெளியிட வேண்டுமென்று ஆர்வங் காட்டியதோடு அருமையாக முன்னுரையும் எழுதிக்கொடுத்த ஆசிரியர், கவிஞர் அரசையூர் மேரா அவர்களுக்கும், என்னைப் பற்றிய அறிமுகக் குறிப்பினைத் தந்த கவிதாயினி வேதிகா பிரபாகரன் அவர்களுக்கும், அட்டைப்பட வடிவமைப்பினை செய்துதந்த தம்பி துசான் அவர்களுக்கும், வெளியீடு செய்கின்ற பட்டிப்பளைப் பிரதேச கலை, இலக்கிய, சமூக அபிவிருத்தி ஒன்றியத்தினருக்கும், அழகுற அச்சிட்டுத்தந்த ஷெரோணி அச்சகத்தினருக்கும், எனது சகோதரன் தேவா, என் குடும்பத்தினர், என் இனிய உறவுகள், எனது நண்பர்கள், நண்பிகள் அனைவருக்கும் எனது நன்றிகளைக் கூறிக்கொள்வதில் மனமகிழ்ச்சியடைகின்றேன்.

"இன் சொல் தேடி
இவன் இன்பக்கவி கோடி
தேன் வார்த்தைகள் தீட்டி
வான் முழுதும் கொடிகட்டி
என் தமிழ் வாழும் பல உள்ளங்கள் கோடி"

என்றும் உங்கள்
**மட்டுநகர் கமல்தாஸ்**
முதலைக்குடா.

# பொருளடக்கம்

| | பக்கம் |
|---|---|
| என் தாய்த் தமிழுக்காக | 01 |
| என்னைப் பற்றி | 02 |
| இரக்கமற்றாய் இயற்கையே | 03 |
| அகதிகள் புலம்பல் | 04 |
| செயற்கை அழிவு எதற்கு மானிடா? | 06 |
| உலகமே உச்சரித்துப் பாருங்கள் | 08 |
| இடையில் பார்வையற்ற இளைஞனின் புலம்பல் | 11 |
| மண்ணுக்கு இரை இளையோர் அல்ல | 12 |
| கசங்கிய முல்லையானாள் வித்தியா | 13 |
| வேடிக்கையுடன் சிலர் | 15 |
| எங்களுக்காகவும் பேசுங்கள் | 16 |
| எம் ஏக்கம் நிறைவேறுமா | 17 |
| எங்கள் மண்ணில் | 18 |
| வெளிநாட்டுக்காரன் | 20 |
| மீண்டும் ஜனனம் வேண்டாம் | 22 |
| நண்பனின் மடல் | 24 |
| அன்று வித்தியா இன்று சேயா | 26 |
| ஈழத்துப் புலவனுக்கு | 27 |
| புரட்டாத பக்கங்கள் | 28 |
| யார் அழுவார் | 28 |
| நிலம் விழுங்கிகளின் நிட்டூரத்துக்குள் நிம்மதி | 29 |
| யார் சாபம் இது | 30 |
| எனக்குப் பிடித்த புத்தகங்கள் | 30 |
| பாசத்தின் பயணம் தேடி | 32 |
| புதினப் பொருளாக பாதையில் பாவை | 33 |
| குழந்தை வரம் | 34 |
| மதிப்புக்குரிய பெண்களே! | 35 |

எங்கள் துயர் துடைக்க வாருமையா? 35
அபிவிருத்திகள் 38
எதிரி வேண்டும் 38
இல்லாததைத் தேடுதல் 38
ஏதிலி 38
யார் பக்கம் கடவுள் 39
அம்மாவின் குரலில் 39
வறுமையின் கொடுமை 40
இயற்கையைத் தத்தெடுங்கள் 41
முடிவில்லாத பாதைகள் 41
கல்கம் செய்தவர்கள் 42
இவர்கள் விடிவின் ஒளிப்பிளம்புகள் 44
ஒன்றுபடு தமிழா 45
அழியாத கவிதைகள் 46
தியாகிகள் வாழ்க 47
வாழ்வு தந்த தெய்வங்கள் 49
அழாதே அம்மா 51
இருக்கும் இடத்தில் ....... 52
நீ நாளைய வரலாறு 52
எப்படி மறப்போம் 53
இன் தமிழ் எழுத்தாளர்களே வாழ்க ! 54
நந்தவனத்தேரு எங்க ஊரு 55
எல்லாள மன்னன் 56
வந்த காகம் 57
இளமையின் கல்வி 58
கனவுகள் மெய்ப்பட வேண்டும் 59
நம்பிடாத நாயகி 60
சிகரட் 61
அதிசயமான காதல் 63
நண்பன் 63

என் இனியவளின் பாசம் 64
பவித்திரமான பாசம் 65
மர்மமான அவள் காதல் 66
நித்தமும் உன்னை பார்க்க ஏங்கும் மனது 67
கனவு காணும்போது... 68
காதல் கதை பேசி 69
அந்தக்கால நினைவுத் தடங்கள் 71
அழகில் தடுமாறிய இதயம் 72
என்ன பதில் சொல்லப் போகிறாய் 73
புரட்டிப் பார்த்த பள்ளி நாள் நினைவுகள் 74
இரசனையற்ற இதயம் 76
இறக்காத என் காதல் 77
சொப்பனத்தில் சொர்க்கம் கண்டேன் 77
காதலித்து பார் 79
காதலர்கள் 79
படித்துச் செல்கிறாள் 80
என் மனதுக்குப் பிடித்த தேவதை 80
நீ என் கடவுளாகிறாய்! 81
மரணம் 81
என் காதல் புரிகின்றதா? 82
சாமரங்கள் வீசாது 82
அநாகரிகம் 82
நீ மட்டும் போதும் 83
கொள்ளை ஆசையடி 83
கண்ணீர் 84
தேடல் தொடர்வோம் 84

## 01. ஏக்கங்களின் அத்தாட்சிப் பத்திரம்

### என் தாய்த் தமிழுக்காக

நீ பிறந்த மண்ணில்
நான் பிறந்தேன் – ஆதலால்
உன் மீது காதல் கொண்டேன்!
எம்மை அழிக்க நன்னூலை எரித்தான்
அனைத்தையும் காக்க
ஒருவன் அவதரித்தான்!

நீ அழியாது வாழ
நானழிந்து போவேன்,
உனைப் புகழ்ந்து இன்னுலகில்
எடுத்துரைத்துப்போவேன்!

எல்லாமே நீயென சொல்வேன்
நீயின்றி நானில்லையென வாழ்வேன்!
உனை அழிக்க வருவோருடன்
பெரும் போர் புரிவேன்.
மார்பைப்பிளக்கும் கூரிய வேலேந்தி
மகிழ்வுடன் சாய்வேன்
ஆனந்தக் கண்ணீரினால்
தமிழன்னையை நனைப்பேன்!

பரிந்துரைக்க யார் வாராது போனாலும்
புரிந்துரைப்பாய்
பூலோக வாழ்வை விட்டு
பரலோகம் ஏவியது உன்னாலேயென்று!

பல்லாயிரம் பாவலர்களில்
நான் ஒரு சொல்லாயிருப்பேன்!
என் தாய்த் தமிழுக்காக!
என் தாய்த் தமிழுக்காக!

## என்னைப் பற்றி

நான் கிராமத்தான்
வறிய குடும்பத்தின்
அங்கத்தவன்
சிறிய குடிசைக்கு
சொந்தமானவன்

ஏழ்மை வாழ்வை அங்கமாக
கொண்டவன்
ஏளனத்துக்கு ஆளானவன்
எளிமை சிறப்பெனக் களிப்பவன்

கட்டிலிருந்தாலும்
தரையில் கொஞ்சம்
தலை சாய்ப்பவன்

கனவிலே ஊரழிந்தாலும்
நினைவிலெழுந்து அழுபவன்
உயிர்கள் அடாவடியாகக்
கொல்லப்படும்போது
உதிரக் கண்ணீர்
சிந்துபவன்

என்னோர்களின்
மனக்குமுறல்களை
எழுத்துக்களாக்கி
எடுத்துரைப்பவன்

முன்னோரின் வார்த்தைகளை
முடியாக அலங்கரிப்பவன்

கலப்பை தூக்கிய
உழவனாக
எழுதுகோல் ஏந்திய
உழவன் நான்

அகங்காரம் கொண்டவனிடம்
எனது அசையாத மார்பு
நிமிர்ந்தே நிற்கும்
சிறந்தவனிடம்
எனது சிரம்
தாழ்ந்தேயிருக்கும்

## இரக்கமற்றாய் இயற்கையே!

இயற்கைத் தாயே
இரக்கமற்றவளானாயே
இன்னல் நிரம்பிய வாழ்வில்
இன்னும் இன்னும்
நிந்தனையிட்டனையோ

பாமரர் எங்களிடமும்
கோர முகத்தைக் காண்பித்தாய்
அடிமையாக்கினான் மானிடன்
நீ இருக்கின்றாய் என்று வேதனைகளை
போக்கினோம்
நீயும் அவர்களைப் போல்
கொடுங்காரராய்
மாறிவிட்டாய்.

- 2016.

## அகதிகள் புலம்பல்

வானில் வெள்ளி நிலாக்
காணும் காலம்
புரையோடிப் போயிற்று.
அனலுடன் வரும்
எரிகணை வந்து
அப்பாவி மக்களின்
குடிசைகளைச் சிதைக்க
பதுங்கு குழியில்
விழிபதுங்கப் பதறும்
காலமிது......

ஆலய மணியோசை
கேட்கவுமில்லை
இறைவனுக்குத் தீபங்கள்
ஏற்றவுமில்லை
உயிரினங்கள் பதறுகின்றன
ஓய்வில்லாத பல்குழலால்.
கொஞ்சம் ஓய்ந்துவிட
கையில் பட்ட
ஆவணங்கள்
அணிந்திருந்த ஆடையுடன்
அபிலாசை புதைந்து
ஆதரவுக்கு ஒரு புறம் ஓடினோம்.
படங்குக் குடிசையில்
பதறும் பாலகர்கள்
இமை மூடாத் தூக்கம்

அழும் குழந்தைக்கு
பால் ஊட்ட
பணமும் இல்லை
கௌரவம் மறந்து
வாங்கிய காசு
கூழ் குடிக்கப் போதவில்லை
செல் சத்தம்
சேய் உறங்குவதில்லை
எங்கள் பக்கம்
போர் முழக்கம்

செழிப்புடன் வாழ்ந்த
எம்மக்கள்
சிதறிக் கிடக்கின்றார்கள்
வீதியோரங்களில்.
வெளி உறவுகள்
கொடுக்கும் பொதியை
இடையில் பறிக்கும்
காடையர்களும் பலர்.

**- 21.09.2008 வீரகேசரி.**

## செயற்கை அழிவு எதற்கு மானிடா?

சமமாய் பிறப்பெடுத்த
மனிதரெல்லாம் பகையோடு
வாழ்கின்றார்.
கருவிலிருக்கும்
குழந்தைக்கு அந்த
பகையைக் கற்றுக் கொடுக்கின்றார்.
நாளைய நாட்டில்
நயவஞ்சகத்தோடு
வாழ்கிறார்.

குரங்கிலிருந்து
வந்தவன்
குனிந்தோ தாவிக் கொண்டோ
வாழவில்லை.
வால் வைத்த
மனிதன் வாழ்ந்திட்ட போதும்
வாலில்லா மனிதன்
வாழ்வதற்கு இடமேயில்லை.

பாண்டவரின் தலைவன்
தர்மர்
பாவங்கள் செய்யத்
தவறியும்
பரலோகம் போகும்
போது
சோதனையுடனே
போய்ச் சேர்ந்தான்
பாவத்தின் வயலிலே

வாழும் மனிதர்கள்
எப்படிப் போய் சேர்வார்களோ?
படைக்கத் தெரிந்த இறைவனுக்கு
அழிக்கத் தெரியாதா?
ஏன் மனிதா !
நவீன கேடயங்கள் படைக்கின்றாய்
இவர்கள் யார் இறைவா!
மண்ணில் எதற்கு இவர்கள்?

இறந்தவர் பிறப்பதும்
வாழ்பவர் இறப்பதும்
மறுமை வாழ்வே
இந்த முடிவில்லாப் பயணம்
இயற்கைக்கு சமமே
செயற்கை அழிவு எதற்கு மனிதா?
விடைகள் இல்லாமல்
வாழ்கின்ற தேசம்
விடைகளை மர்மமாய்
புதைக்கின்றது பல தேசம்

விடையற்று வாழும்
உயிர்களெல்லாம்
கையில் உயிரை
பற்றிக் கொண்டே
வாழ்கின்றார்
இவர்களின் பாவத்தை
யார்தான் சுமப்பரோ!

**-10.05.2009 வீரகேசரி.**

## உலகமே உச்சரித்துப் பாருங்கள்

பாசத்தின் பகிர்வுக்காய்
நீதி கேட்டு இவர்கள் பாதங்கள்
எத்தனை தடவைகள் சென்றன!
அத்தனையும்
செயலற்றுப் போய்
உறவுகள் அழிந்த வண்ணமே...

இவர்கள் மரணசாசனம்
மறந்து போன மனங்கள்
மாய்ந்து போன பிணங்களே!

இவர்கள் அங்கத்தில்
பற்றிய அக்கினியை விட
உறவுகள் சொந்த மண்ணில்
வேகும் தீயே
தாங்கொண்ணாதென்று
தவமின்றிக் கிடைத்த இவர்கள்
இனிய வாழ்வையும் உயிரையும்
உடலையும் தானம்
செய்த அக்கினிப் பூக்களே!

நாட்டின் சாதனைச் சின்னங்கள்
வரலாற்றுப் பதிவேட்டில்
பதிக்கப்பட்ட நாயகர்கள்.
உலகத்துக்கு உணர்த்திய பாடம்
உள்ளத்தினை கிழிக்கிறது.

உணர்வுகள் கிளறி
இவர்கள் இலட்சியப்
பாதத் தடங்களையே
உற்றுப் பார்க்கிறது

திண்மமாய் உறைந்த
உணர்வுகளை உருக்கி
விட்டீர்களே திரவமாய்
உலக மெங்கும் பரவ
நாளை என்று
இன்றையைக் கடத்த
காலம் எமக்கில்லை
கையில் ஏந்துங்கள்
கனலென்ற வார்த்தைகளால்
உயிராயுதம் ஏந்தினார்கள்.
நொடிகூட தாமதம் வேண்டாம்
நொந்து வெம்புகிறது
எம்மினம் என்று தன்னையே
எரித்த சரித்திரப் பூக்கள்!

உறுதியென்ற அணை கட்ட
உறுதி பூண்டு வாருங்கள்
என்ற கோஷத்துடன்
தமிழ் இனி மெல்லச் சாகும்
தமிழன் வேகமாக
சாவான் என்றதே!
தொப்புள் உறவான
முத்தான முத்துக் குமாரன்.
என் இனத்தின் அழிவைத்தடுத்து
நிறுத்தத் தவறிய உலகமே....
தட்டியெழுப்ப என்னுடைய
இனிய உயிரை
வழங்குகின்றேன்
என்று படித்து முடிப்பதற்குள்
சிதறி உடைந்தனவே
கண்ணீர்த் துளிகள்
முருகதாசனே!

உலகமே இவர்கள்
மரணசாசனத்தை மீண்டும்
உச்சரித்துப் பாருங்கள்
உண்மையை உங்கள்
உதடுகள் சொல்லட்டும்
கல்லாய்ப் போன
உங்கள் மனம்
பதறும் உறவுகளின்
கண்ணீர் பட்டுக் கூட
சாயாதா எங்கள் பக்கம்
முத்துக் குமாரனில்
பற்றிய தீ
தொட்டுத் தொடர்கிறது...
அக்கினித் தியாகிகளின்
அணையாத தீப ஒளியில் விழிக்காதா?
உங்கள் விழிகள்
இவர்கள் இலட்சியம்
உதயமாக
உச்சரித்துப் பாருங்கள்
ஒரு தடவை

(வீரகேசரி 2009)

# இடையில் பார்வையற்ற இளைஞனின் புலம்பல்

பந்திக்கு பிந்தினேன்
பட்டினியான கதை
எழுத்தெண்ணிப்படித்தேன்
பட்டம் பதவி பெற்றேன்
விழியின்றி வேதனையுடன் வாழ்கின்றேன்

உறவு ஆயிரம் பாசம் பலவிதம்
பிரிவு வந்து ஆதரவற்றேன்
நான் விட்ட கண்ணீருக்குப் பஞ்சமில்லை
என்னை பார்த்து பாவப்படாதவர் யாருமில்லை
காதலியாக இருந்தவள் காலை வாரிப்போனதால்
பயனற்றவனானேன்

காசுக்கு ஆசை கொண்டு
என் கண்ணை பறித்தனரே !
ஆதலால் குருடனானேன்
வாழ்வில் ஒருநாள்
இருள் பெரிதல்ல
வாழ் நாள் முழுவதும்
இருளில் வாழ்வது தான் முடியாதது
இளமைப் பருவம் அழகானது
இடையில் பறித்தார்கள்
என் உயிரை அல்ல
என் வாழ்வின் விடியலை
சாகத் துணிகின்றேன்
கையில் விசமில்லை
வாழத் துடிக்கின்றேன் விடியலில்லை

கடவுள் கண்ணைப் பறித்திருந்தால்
கண்ணீர் விட்டு பயனாகும்
கயவர்களிடம்
பறிகொடுத்து விட்டேன்
கதறி அழுது என்ன பயன்....

(வீரகேசரி வாரமலர், 2009)

# மண்ணுக்கு இரை இளையோர் அல்ல

பாலை வனத்தில் தாகம் தீர்க்க
அலையும் ஒட்டகம் போல்
எம் இளையோர்
இரு தலைக்கொல்லியாக அலைவது ஏன் !

நிம்மதி எனும்
நீள் வட்டப்பாதையை
அடைய முடியாமல்
அகதியாக நிற்பது
எம் இளையோர்தான்

பெற்றோரின்
கனவுத் துளிகளை நிஜங்களாக்க
பெரும் பாடுபட்டும் முடிவதில்லை
விண்ணோர் ஏற்றிய
விதியின் மிதிவெடியில்
சிக்கி சிதறடிக்கப்படுகிறது
எம் இளையோர் வாழ்வு
இலக்கணத்துடன் இணைந்திருக்கும்
இளையோர் செல்வங்களை
செலவு செய்து விடாதீர்கள்

மண்ணுக்கு இரை இளையோர் அல்ல
நாட்டை ஏமாற்றுபவர்களாக இருக்கட்டும்
இளையோர் எண்ணங்களை
எறிந்துவிடாதீர்கள்
ஏட்டுச் சுரக்காய்களாக.

- வீரகேசரி, 2008.

## கசங்கிய முல்லையானாள் வித்தியா

கழிப்பறையில் பிறந்தவர்கள்
உன்னை கற்பழித்த காடையர்கள்
வெடிகுண்டு மழையில் நனைந்த நீயோ
கடிநாய்களின் கையில்
கைக் குழந்தையானாய்
பள்ளிக்குச் சென்ற நீயோ
படுபாவிகள் கையில்
கசங்கிய முல்லையானாய்
தொல்லை அகன்ற வாழ்வை
புதைத்தவர்கள் நாம்
வெள்ளைநிற ஆடை என்று
வேட்டை நாய்களுக்கு விளங்கிடுமா?

பிஞ்சுக் குழந்தை நீ யென
பஞ்சப்பரதேசிகளுக்கு புரியவில்லையே
தங்கத்தமிழ் குழந்தையே
தயங்காது சென்றிடு
எங்கள் குலம் இப்படியே அழிந்திடும்

மேய்ச்சல் மாடுகளுக்கு இருக்கும் துணிச்சல்
பாராண்ட தமிழனுக்கு இன்றில்லை
செத்துப்போனது நீதி
சொத்துள்ளவன் பக்கமே நீதி
என்ன பாவம் செய்தையா எங்கள் குலம்
சோதனைகளோடு வெம்பி
வாழ்கின்றோமைய்யா
பாதுகாப்பை இழந்துவிட்டோம்

பாவாடைராயர்களுக்கு வேட்டை
அட்டூழியக் காரனுக்கும் அடுத்தவனுக்கும்
இரையாகிப் போகுமா? எம்மினம்
இதைக்கண்டு இயல்பாக இருக்குமா? எம்மனம்

இந்த நாசம் பெரும்
சேதத்தைத் தரும்
உன்னைப் பலி தீர்த்தவர்கள்
விழியின்றிப்போவார்கள்
வாழ வழியின்றி அலைவார்கள்
அள்ளிநீர் பருக கரமின்றி
காமுகன் திரிவான்
கொள்ளிவைக்க யாருமின்றி
படுக்கையில் மலம் போய்க்கிடப்பான்

உன் கன்னங்களால் வழிந்த நீருக்கு
கையாலாகாத நாம்
வஞ்சத்தை வார்த்தையால்
கொட்டிவிடவே முடிந்தது
இறைவனை இறைஞ்சி வேண்டுவோம்
இன்னுமொரு இழிநிலை வராதிருக்க

**(17.05.2015)**

## வேடிக்கையுடன் சிலர்

பெண்ணென்றால் பேயும் இரங்கும்
இனவெறியருக்கு இல்லை இரக்கம்
குழந்தைகள் என்றால் கடவுளுக்கு சமமே !
காடையருக்கு இல்லை மனமே !
ஓடி ஓடி பாதம் தேய்ந்து
உறவுகளின் உறக்கமும் ஓடி மறைந்து
நடக்க முடியாதவைகளும்
நினைத்திராத மர்மமாய பூஜைகள்
நடந்தேறியது எம் ஈழத்தில்

இயற்கையின் கொடையால்
இறையருள் வேண்டி
இன்பமாய் வாழ்ந்த
இன்பலோகம் இன்றைய சுடுகாடாய்
ஒருவர் மாண்டால் ஊர் கூடி ஒப்பாரி
அருகினிலே உறவுகளின்
பிணக்குவியல்கள்
புதைப்பதற்குக் கூட காலம்
கையிலில்லை இவர்களுக்கு
அள்ளிக் கொடுத்த கைகள்
கிள்ளிக் கொடுக்கத் தயங்கும்
பார்வைகளுடன்
இன்று இழப்பதற்கு எதுவுமின்றி
தானமாய் வழங்கிய இன் உயிரைவிட
விலையும் கொலையும்
தினந்தோறும்
காண்கின்ற காட்சிகளாக

பிஞ்சு குடிக்கும் பாலுக்கும் விலை
கஞ்சி குடிக்கும் ஏழைக்கும் விலை
வேடிக்கையுடன் சிலர்
வேதனையுடன் பலர்...

## எங்களுக்காகவும் பேசுங்கள்

எங்கள் முற்றங்களில்
ஓடி விளையாடிய குழந்தைகள்
இன்று உடல் சிதைந்த
புகைப் படங்களாக பார்க்கின்றோம்
புள்ளிக் கோலமிட்டு
பிட்டு அவித்து ஊட்டிய
அம்மாவின் கையில்லை இன்று
தோளில் சுமந்து
பள்ளிக்கு கொண்டு விடும்
அப்பாவுமில்லை
கொடியேற்றி கொண்டாடினார்கள்
நாங்கள் படங்குக் குடிசையில் திண்டாடிய போது.
சிரித்தார்கள் எங்கள் தேசம்,
நாங்கள் வாழ்ந்த சொர்க்க பூமி
சுடுகாடாய் தெரிந்த போது.

மானமென்ற ஒன்றுக்காய்
மடிந்த பெண்ணின்
உடலை நிர்வாணப் படுத்தி
புகைப்படங்கள் எடுத்து
புன்னகைத்தார்கள்.
உயிர் தப்பி வந்த பெண்களை
தெரியாத பாசையில் ஏசினார்கள்
அடித்தார்கள், உதைத்தார்கள்
தாங்கிக் கொண்டோம்.
வெறியாட்டம்
ஆடி எங்கள் வாழ்வை
பலியாக்கினார்கள்
இன்று வரைக்கும்
அழுகின்றோம்.
எங்களுக்காகக்
கொஞ்சம் பேசுங்களேன். **(2010)**

## எம் ஏக்கம் நிறைவேறுமா?

தின்னச் சோறு இல்லாவிட்டாலும்
படுக்கப்பாய் வேண்டுமென
அம்மம்மா அடிக்கடி புலம்பிக்கொண்டிருப்பாள்

இன்று உண்ண உணவுமில்லை
உடுக்க உடையுமில்லை
படுக்கப்பாயுமில்லை
மழைக்கொதுங்க வீடுமில்லை
இது நமது நாடென்று பெருமை கொள்ள
சொந்த நாடுமில்லை

பிழைப்பைத் தேடி வந்த நாட்டில்
தேசியக்கொடியை ஏந்தி
பூரித்துக்கொள்கின்றோம்

எப்போது எமக்கென்ற நாட்டின்
தேசியக் கொடியை பேருவகையுடன்
உயர்த்திப் பிடித்து வலம் வருவதென
விரக்தியில் வாழ்கிறோம் ........

## எங்கள் மண்ணில்

பச்சை வயல்களும்
பண்பாடாய் திகழும்
அரிவாள் பட்ட (அரிதாள்) வயல்களும்
இரேகைச் சித்திரமாய்ப் புலரும்
எத்தனை உழவர்கள். உதிரமும்
உடல்களும் உரமாய்க்கிடக்கிறது
அத்தனை பண்பாடும்
எங்களுக்குள் அடங்கியது

தொன்று தொட்டு கட்டிக்காத்த
பண்பாட்டை
இன்று வந்த நாம்
விட்டுச் செல்லலாகுமோ ?
கதிரவனைக் கைதொழுது
நந்தியை கடவுளாய் வணங்கி
புதிரெடுத்தலை விழாவாகக் கொண்டாடி
பட்டு வேட்டிகட்டி பாட்டன் பூட்டன்
பண்பாட்டை சுட்டிப் பேசிடலாமா?

பல்லி விழுந்தால்
பஞ்சாங்கம் பாதகம், சாதகம் சொல்லுதையா
ஏர் பூட்டி உழுது நாங்கள்
பயிர் விதைகள் செய்தோமையா
உடல் வருத்தி ஊதியம் பெற்றோம்
நவீனத்துவம் வந்து நாசம் தனைத் தொட்டோம்
பாரம் பரிய பவனி நாம் அறிந்த பூமி
மீன் வடிவான தேசம்

தான்தோன்றி அப்பனது பாசம்
பின் தள்ளப்பட்ட எங்கள் தேசம்
பின் நகராத எங்கள் கலாசாரம்

பிறப்பும் இறப்பும்
சாஸ்திர சம்பிரதாயப்படி பின் பற்றி
மாற்றமில்லாத
மனங்களைக் கொண்டு
சேவையாற்றி
மூட நம்பிக்கை என்று
மூடர் உரைத்தாலும்
மூதாதையர் விட்டுச்சென்ற
தொடர் கதைகளிது
உடல் மண்ணில் புதையும் போதும்
உரமாய் புதையும் மண்ணில்
தேடல் புரிந்தவன் தெரிவிப்பான்
எம் புகழை விண்ணில்
எழுது கோல் சட்டைப்பையில்
உழுது கோல் தோள்ப்பட்டையில்
உழவன் மகன் ஊதாரியானால்
ஊரே மயானமாகும்
ஊதாரிகளும் உழவனானால்
ஊரே ஓரழகாகும்.

**(முகவரி சஞ்சிகை - 2015)**

## வெளிநாட்டுக்காரன்

நொந்து தவிக்கும்
எம் உறவுகள் அங்கே
அந்நிய தேசத்தில் அரவணைப்பின்றி
அலைபேசி பேச்சில்
தவிக்கின்றோம் இங்கே
வியர்வைதனை ஊற்றி
விதைகளில் கலந்து
விதைத்தால் விவசாயம்
வியர்வை கொட்டி
வேதனைகலந்து விதைத்தால்
மிஞ்சுவது வேதனை மட்டும்

வாங்கிய கடனுக்கு வட்டி
வட்டிக்கு குட்டி போடும்
காலம் மனதினிலே
சம்பளம் எடுத்தால்
பை நிறைய சில்லறைக் காசு
ஓரிரு நாள் கடந்த பின்
வேறு ஒருவரின் காசு

வெளிநாட்டுக்காரரென்று
வீட்டுத்திட்டம் பறிப்பு
இந் நாட்டில் நமக்கு ஏது மதிப்பு
அள்ளிக்கோதும் தலை முடி
உதிர்ந்து போன
சொட்டைத்தலை மட்டும்
சேர்த்து வைத்த பணத்துடன்
பாசங்களை நாடி

கடதாசி கூட
ஒரு அழைப்புக்கூட
போடவில்லையென்று
உறவுகள் முகத்தை
மறுபக்கம் திருப்பி
விழி கண்ணீர் சொட்ட
உதடு மட்டும்
புன்னகை வடிக்கும்

விமான நிலையத்தில்
வெளிநாடு என
கலகலக்கும்
விமானப்பயணம்
முடிந்திறங்க
வேதனைக் காற்றொன்று
நமக்காக வீசும்

வழியனுப்பி வைத்த
உறவுகள்
பாசம் பிசைந்து
வகைவகையான
தின்பண்டங்கள்
சுவைக்க மனம் வாராது
அந்நிய தேசத்தில்
அவலப்படும் அகதியைப்போல
கண்களைக் கசக்கிய படி
காலத்தைக் கடத்தி
தாயகம் திரும்புகின்றோம்
சொந்தங்களைத் தேடி ........

- **வீரகேசரி வாரமலர், 2017.**

## மீண்டும் ஜனனம் வேண்டாம்

அடையாள சின்னங்கள் அடைகாத்தும்
அடை மழையில் அடித்துச் சென்ற
சோகம் அகலவில்லை
அலை பாயும் மனங்களிலிருந்து
தட்டுத்தடுமாறி முட்டிக்கொண்ட பின்
காட்டி விட்ட சரியான பாதையில்
கூட்டிப் போகத் துணை நின்றும்
தட்டித்தள்ளிய படி தன்பாட்டில்
சென்றிருந்தோம்
ஈழச்சுவட்டில்
எம் பெயர் இடம்பெறாத போது
வலித்த வலியை வெளிக்காட்டியும்
தடவி விட யாருமில்லை
அவமானத்தின் கூச்சல்
மட்டும் தான் எமக்கு மிச்சம்
எம் தாய் நாட்டை
மாற்றான் களவாடிய போது
மனங்களின் காயங்கள்
கண்ணெதிரே காண்கின்ற போது
காப்பாற்ற முடியா
கோழைத்தனம் எம்மைக்
குத்திக் கொடைகிறது
தூரத் துரத்தி விட்ட
துயரங்களைப் பற்றிக்கொண்டு
தூக்கங்களைச் சிறைப்பிடித்து

துன்ப வாழ்வில் என்ன இலாபம்
இலட்சியம் இனி
இயற்கையால் வாழ்த்திட
இப்போதே விரைந்திட
இன்பம் என்ற காலம் இணைக்கப்பட
கண்ணீரைத் துடைத்த படி
காலத்தை மிக விரைவாகக் கடத்திய படி
துன்பத்தைச் சுமந்து
இன்பத்தைத் தேடாமல்
இனியொரு எதிர்காலம்
இல்லை என்ற ஏக்கத்தோடு
உடலிருந்தும், உயிரிருந்தும்
வெறும் நடைப்பிணங்களாக
எம் மக்கள்
மறு படியும் பிறப்பு வேண்டாம்
மலர்ந்த மலர்களின்
வேர்கள் படர
தனியொரு மண்ணை
பெறும்வரை....

## நண்பனின் மடல்

அன்புள்ள நண்பனுக்கு ஊர் நண்பன் சொல்லுவது
கடல் கடந்த பயணத்தில் உன்னைப் பார்த்ததற்கு இன்னுமில்லை
கடதாசி ஒன்று போடுகிறேன் கவலையை குறைப்பதற்கு
ஊர்ப் புதினங்கள் ஊதாரியாய்ப் போயிற்று
இயற்கையாய்த் திகழ்ந்த நிலம் சுடுகாடாயிற்று
இரை தேடும் பறவையினம் இங்கில்லை
கரை தொடும் அலைக்கும் விடுதலையில்லை
கலப்பு மணமுடிப்பில் பலியாகும் எம்மினப்பெண்கள்
இது தான் உசிதம் மச்சான்
ஆலையடிக் கோயிலில்
உன்னவளைக் கண்டேன் மச்சான்
இளசுகள் போதைக்கு அடிமை மச்சான்
போற இடம் வார இடமெல்லாம் அவன் மொழி முதலெழுத்து
போர்க் கோழி கூவயில மசக்கையில
கிடந்த மக்காள் மசக்கை தெளிவாக மகா தலைவனை தேடுகின்றனர்
நம்ம நினைக்காததெல்லாம் நடந்தேறியது
நடக்கயிருப்பது நாம் பேசும் மொழிமாற்றம் நண்பா
முன்தினம் உன் அப்பாவை போதையில் கண்டேன் மச்சான்
தலைவனின் பாடலோட முணு முணுத்து போவதை
கோயிலிலே கும்பிட்டு தீபமேற்றிய விளை நிலத்தில்
வினாசகார படைகள்
கட்டப்பந்து அடித்து ஓடித்திரிந்த வயலெல்லாம்
படை முகாம்கள்
பஞ்சாயத்து போடுறவனும் பாதகன் பக்கம் நண்பா
கோயிலுக்கு போயிருந்தால் அடிக்கிற காற்றில
நம்ம மக்களின் அழுகை தான் கேட்கும்

நம்ம பக்கம் சாதகமாக பேச யாருமிலர்
உழைப்பாளியெல்லாம் நாடு நாடாய் அடிமையாக
கூட்டாளி நீ எப்போ கூடி வாழ்ந்த மண்ணைப் பார்க்கப்போகிறாய்
தோல்வியென துவண்டது போதுமடா
தோல்வி ஒரு அபிப்பிராயமென துள்ளி நாமும் எழுந்திடனும்
தேடிக்கிடைக்காத திரவியத்தை தொலைத்துவிட்டு நிற்கின்றோம்
தீர்க்க தரிசி சொன்ன வார்த்தை நிகழ்கின்றது எம் கண் முன்னே
தொடரில்லா கவலைகள் இன்னும் நிறையயிருக்கு
நெஞ்சு வலிக்கிறது விழி நிரம்பி விட்டது
முடிக்கின்றேன் சுக நலம் விசாரிக்க வில்லை
சோதனைக் கண்டத்தில் வாழும் நமக்கு முக்கியமாக தோன்றவில்லை
நீ நலம் தானே?
இப்படிக்கு
உனது மித்திரன்

## அன்று வித்தியா இன்று சேயா

சாதிக்க
முளைத்த பயிரை
முளையில் கிள்ளி எறிந்த
காமநோய் தொற்றிகளே!
அறியா இளம் துளிரை
வெறியோடு மேய்ந்த
காட்டெருமைக் கூட்டங்களே!

போதையுண்டு
பேதை மேல் பாய்ந்த நீச்சர்களே !
பால்மணம்மாறாத பச்சிளங்குழந்தையை
எச்சிப்படுத்திய எந்திரகாரர்களே

முள்ளி வாய்க்காலில் பரவிய குருதியை
அள்ளிப்பருகிய மூடோரின் இனத்தோனே!
உங்கள் மனையில் பிஞ்சுகள்
மிச்சமேதும் இருக்கிறதா ?

மனிதனை மனிதனாய் மதித்ததினாலே
மதி கெட்டோரின் இன அழிப்பில்
தமிழினமே அழிந்தது
இல்லையெனில்
பெரும்பான்மை இனம் பெரிதாய் அழிந்திருக்கும்
பேச நாதியின்றி நாடு நாடாய் அலைந்திருக்கும்

துளிரை துன்பியல் செய்து கொன்றோரை
களிறு கொண்டு மிதித்துக்
கொல்ல வேண்டுமென்பதற்காக
எழுந்தது என் பேனா
குற்றவாளிகள் குறையும் வரை

அன்று வித்தியா இன்று சேயா என தொடரும்
பாலியல் கொலைகள்
பலியான பாலகிகளுக்கு
பலன் கிடைக்க நாளாகிப்போகுமா ?
கையாலாகாத்தனமாகுமா ?
என்ற வினாவுடன் இருப்பதினாலே
ஈனப்பிறவிகளின், ஈனச்செயல்களும் நீளும்...
நல்லாட்சி என்ன செய்யப்போகுதென்று
பொறுத்திருப்போம்.

-17.09.2015.

## ஈழத்து புலவனுக்கு...

உன் பேனா முனையே
பெரும் போர் புரிந்து
பேரினவாதிகளை உலுப்பியது
நீ பேசிய வார்த்தைகள்
தமிழனின் நெஞ்சில் பதிந்தது
அந்த வீர வேதமே
பெரும் அணியாகத் திரண்டது

பேனாதாரியும் பேரினவாதியோ
சிறை வைத்தவனே பேரினவாதி
பேனா முனையைக் கண்டு
பெரும் வெடியாய் அதை மாற்றி
விளங்கிவிட்டான்
காராக் கிரகத்தினுள்
கட்டுண்டு போயிடுமோ
ஈழத்துப் பரணி பாடிய புலவனின்
எழுந்துரைத்த பரிந்துரைகள்
எட்டாத தூரம் சென்ற உன் கீர்த்தியை
எட்டிப்பிடிப்பார் யாருமில்லை.

## புரட்டாத பக்கங்கள்

வன விலங்கென்று
சுற்றி வளைக்கப்பட்ட
முட்கம்பிகளுக்குள் முடக்கப்பட்டு
வாழும் ஓர் இனம்

வெளிநாட்டு மாந்தர்கள்
வந்து வந்து போகின்றார்கள்
சுற்றுலாப் பயணிகளாக
பல புகைப்படங்களுடன்
சில பக்கக் குறிப்புக்களுடனும்
வருடங்கள் கடந்து விட்டன
இன்னும் புரட்டப்பட வில்லை
அந்த சில பக்கங்கள்.

## யார் அழுவார்

ஓர் பிணம் விழுந்தால்
ஊரெல்லாம் ஒப்பாரிகள்
ஊரெல்லாம் பிணம் விழுந்தால்
யாரெல்லாம் அழுவார்கள்?

## நிலம் விழுங்கிகளின் நிட்டூரத்துக்குள் நிம்மதி

அடர்ந்த இருட்டுக்குள் ஒரு குப்பி விளக்கு
ஆனந்த நிலா அது
கூட்டாஞ் சோறின் சுவை மீண்டும் நாவிலிருக்கு
பாட்டன் - பாட்டியின் பழைய கதையுமிருக்கு
அந்த நாட்கள் எம்முள் அலாதியாயிருக்கு

அபிவிருத்தி என்ற ஏமாற்ற
அரங்கத்தில் மின் விளக்குகள்
பௌர்ணமிகளாக பாதைகள்
அட்டமியாக அச்சம்
வாழ்க்கை எந்நாளும் அமாவாசை
எமக்கென்று இங்கு என்ன இருக்கு
வாழ வழிவகுத்த வானோர்கள்
வாழும் இடம் எங்கே ?
அதனருகே செல்லப் புல்லரிக்கும் தேகமெங்கே?
திரவியங்களின் வாசனை
தீண்டும் எம் மனங்களை

வட்ட மேசைக்காரர்களே உங்கள்
சட்டைப்பையை தடவுங்கள்
காணாமல் போனோர்களின்
நிழற் படங்கள் தென்படும்
அவர்களை கொஞ்சம் தேடிப்பாருங்கள்

கூட்டங் கூட்டமாக இருந்த இடங்களில்
தோட்டம் தோட்டமாக வாழ வதிவிடமில்லை
பாலர் பட்டமிட்டு உலா வந்த நிலத்தில்
மிதிவெடி அபாயம்

கோயிலின் கருவறைக்குள்
மனித எலும்புகள்
மாசடைந்து போனது புனிதத் தலங்கள்

சோலை புரியை சுடுகாடாய் மாற்றிய
சுடலை மனிதர்கள்
இன்றும் வாழ்கின்றார்கள் அங்கே

## யார் சாபம் இது

தெருவோரம் எங்கள் பிள்ளைகள்
செத்துக்கிடக்கின்றார்கள்
தேடி வந்து பார்ப்பதற்கு சக்தியில்லை
எங்கள் இனம் அழிவது முறையா?
நடக்கின்ற கொலைகளெல்லாம் சதியா?
பாராமுகம் பார்க்குதையா நீதி
பார்க்கும் கண்களெல்லாம் பீதி
வந்தவரை வழிறாற்றும் பூமி
அந்த வயல்களெல்லாம் வெடிகுண்டுச் சகதி
கேட்பதற்கும், பார்ப்பதற்கும் நாதியில்லை
இது தமிழர்களின் தலைவிதியா
வெடிச்சத்தம் இல்லை என்று சொன்னாலும்
வேதனையால் தினம் தினம்
மரண ஒப்பாரிகள் குறையவில்லை

## எனக்குப் பிடித்த புத்தகங்கள்

உன்னில் பித்துப் பிடித்தவன்
அழகான ஆடை உடுத்தி
உனை மெது மெதுவாக
உன் பக்கங்களெல்லாம்
எனது எச்சில் தொட்டு
விரலால் தடவி
அங்க மெல்லாம்
சுவாசமாக சுவாசித்தவன்

மகானானாலும்,
ரிசியானாலும்
உனை
தொட்டணைக்காதவரேயில்லை
மகா வீரனுக்கும்
ஆரம்ப தூண்டு கோல் நீ தான்
உன்னால் பித்துப் பிடித்தவனுமுண்டு
தத்துவ ஞானியானவனுமுண்டு.
மெல்லிய இரவில்
அல்லிமலராக அள்ளியணைத்து
மஞ்சத்தில் அமர்ந்து
சாளரத்தை அகற்றி
உனை படித்து மீட்டு
கண்மூடித்தூங்கினால்
பொழுது இனிமையாய் விடியும்
என்னோடு நீயிருக்கும் கணமெல்லாம்
தனிமையை உணர்ந்ததில்லை

## பாசத்தின் பயணம் தேடி

உயிர் தந்த தாயே! உதறி விட்டாய்
ஊர் பழிக்குமென அஞ்சி
என்னைத் தெருவில் இட்டாய்
முந்தானை விரிக்க அஞ்சாத நீயோ!
முலைப்பாலின்றி தவிக்கச் செய்தாய்

முந்தானைத் தொட்டில் கட்டவுமில்லை
இடுப்பில் சுமந்து பசியாற
உணவு ஊட்டியதுமில்லை
மணல் வீடு கட்டி மகிழ்ந்ததுமில்லை
தாலாட்டி உறங்க பாக்கியமும் இல்லை
மனதில் உள்ள கவலைகளைக்
கொட்டித்தீர்க்க தாய்மடியுமில்லை

பாசத்தின் பயணம் செல்ல
பாதகன் நான் எங்கே செல்ல!
உற்றாரென்று ஓடிப்போக
பெற்றவள் அறியாப்பிள்ளை
நான் எங்கு போவேன்
யாரிடம் என் நிலை
என்னவென்று சொல்வேன்

## சீதனம்

வீட்டின் வாசலில் காகம் கரைகிறது
விருந்தினர் வரப் போகிறார்களென
பாட்டி முணுமுணுக்க
கடன்காரியாகப் போகிறோமென
அம்மா தனக்குள் சொல்லிக் கொள்ள
வாசலில் ஆட்கள்
சீதனம் போதாதென்று போனவர்கள்
திரும்பவும் வந்திருக்கின்றார்கள்
விலை பேச...

## புதினப் பொருளாக பாதையில் பாவை

புன்னகைக்கு எத்தனிக்கும் இதழ்கள்
அதை தட்டிப்பறிக்கும் நாணம்
அழகாய் நெய்த சேலை
அதிலே அங்கங்கே விடப்பட்ட
சில மிளிர்ந்த பகுதிகள்

கூந்தலில் அள்ளி வைத்து
சொருகிய பூக்கள்
தெருவில் பசியாற வரும்
வண்டினம் நிறைய
எளிதில் ஏமார்ந்து திரும்பும்
தேனீக்கள்
ஐந்திஞ்சி இடையை
மறைக்க மறந்தாளோ?
வாஞ்சையுடன் ஆடவர்
பார்வை எல்லாம்
அங்கேதான் சங்கமிக்கின்றன
மார்புப் பக்கத்தை மட்டும்
கவனமாக மறைத்துக்
கொண்டிருக்கின்றாள்
பாவம் அவள் இடையை மறைக்க
மறந்து தான் போனாள் போலும்
பிச்சைக்காரனும் அந்தப் பக்கத்தை
மிச்சம் வைக்காமல் வாங்கிப்போகிறான்
புடைவை கட்டிய புதுமைப்பெண்
புதினப்பொருளாக பாதையில் பாவை.

## குழந்தை வரம்

கல்யாணமாகி
இன்னும் குழந்தை வரம்
கிடைக்கவில்லை
கண்டவரெல்லாம் மனதுக்குள்
முணுமுணுக்கின்றார்கள்
மலடியென்று

தங்கையின் பிள்ளைகளை
புதினங்களுக்குக் கூட்டிப் போனால்
உன் பிள்ளையா? என்று வினாவ
மெதுவாய் இறந்து விடுகின்றேன்

கோயில் குளம் போகும்
போதெல்லாம்
நேர்த்திக் கடனும்
கல்லும் வைத்து விடுகின்றேன்
உடல் நலம் குன்றிப்
போய்க்கிடக்கும்
என் கணவர் குணமடைய
வேண்டுமென்று..

## மதிப்புக்குரிய பெண்களே!

பற்கள் தெரியச் சிரி —நீ
பருவம் அடையாத வயதில்
வெட்கமின்றி இரு —நீ
புரியாத பருவத்தில்
சத்தமாய்ப் பேசு —உன்
உரிமைக்குரியவரிடம்
பகலிரவைப் பகிர் —உன்
மணாளனோடு மட்டும்
காமப் பசிக்காக கல்யாணம்
பந்தம் செல்லாதே உன்
வாழ்வை நீயே மெல்லாதே!
ஆடம்பர வாழ்வை விரும்பாதே
ஆடவரோடு சேராதே!
அழகை நம்பாதே நீ
ஆணவம் கொள்ளாதே
அஞ்சி வாழாதே!
அடி பணிந்து போகாதே!
துணிந்து நில்
எம் ஈழத்து தமிழச்சி போல்
நாணமற்ற நங்கை
நன் நலத்துக்கு கேடு
உன்னை போற்றிப்பாட
சமூகத்திடம் நல்லதைத் தேடு
பெண்ணின்றிப்போனால் — இப்
பூமி இனிமையைப் பெறாது
பண்பாடு இழந்து —எம்
இனம் வளம் பெறாது
நங்கையை மதியாதவன்
நல்ல ஆணில்லை
நால்வகைக் குணமற்றவள் —நல்ல
பெண்ணில்லை
அறியாதவரிடம் நகையாதே
நற் பெண்ணினத்தைப் பகையாதே!

## எங்கள் துயர் துடைக்க வாருமையா?

ஆதியும் அந்தமும் இல்லா
அரும்பெரும் ஜோதியானவனே
அடியார்களுக்கு அருள் சொரியும்
திருவருளே!
கொக்கட்டிச் சோலையிலே
தான்தோன்றீஸ்வரராய்
தன்னாட்சி புரிகின்ற சுயம்பு லிங்கமே!

சித்திரைத் தேரினிலே
சிரித்தபடி நீ வலம்வரவே
சிலிர்க்கும் மேனியெல்லாம்
முத்தியோடு செல்லும் முதல் செல்வன்
பின்னால்
முடிசூடி நீ அழகாய்
வலம் வருவாய்
மணல் வீதியிலே
மக்களோடு சேர்ந்து
தேரிழுப்பாய் தான்தோன்றீஸ்வரராய்
என் துயர் வருவினும்
உன் பாதம் நாம் பணிவோம்
எங்கள் துயர் துடைக்க
நீ ஓடி வரவில்லையே
என் பாவம் செய்தோம்
ஏன் இனித் தாமதமோ பரம்பொருளே !
இன்னிசைக்கும் இலுப்பமரக் காற்றில்
இளைப்பாறிச் சென்றோம்
இன்று வரை
நம்புகின்றோம்

நீ வந்து வினையறுப்பாயென்று
கல் நந்தி
புல்லுண்ட புகழ் தனை
சேர்த்தாய்
வரலாற்று நாயகராய்
வந்தமர்ந்தாய்
பாற் குட மேந்தி
பக்தர் வேண்டிநின்று
களமாடிய வரமேதும்
கிடைக்கலையே ஈஸ்வரனே!
தடம் புரளாது தேரோடி
வருவாயே!
தளராத தாகமதை
தீர்த்திட வாருமையா
மண்முனைத் தேன் கடலில்
தீர்த்தமாடுவாய்
அங்கே அழும் ஓசை
கேட்கலையா? எந்தன் இறைவா!
உன் நாமம் சொல்லியே அழுதார்கள்
அந் நேரம் நீ வரவில்லையே!
எந்நாளும் உனை மறவாது
துதிக்கின்ற அடியாரை
காப்பாற்ற நீ வரவில்லையே
சந்ததி வாழ்வுக்காய்
சந்நிதியில் நீ அமர்ந்தாய்
உன் காலடியில் பக்தரெல்லாம்
நிந்தனையை அபிஷேகம் செய்கின்றார்கள்
சாவுதனை தந்தவனை
காவு கொள்ள வாருமையா......!

## அபிவிருத்திகள்

மின் விளக்குகள் பிரகாசிக்கின்றன
எங்கள் குடிசைகளில்
.குடிசைக்குள் அடைந்த இருள்மேகம்
படர்ந்திருப்பதை எவராலும்
அவதானிக்க முடியாமல்.........

## எதிரி வேண்டும்

எதிரிகளைத்தேடிக்கொள்
அப்போது தான்
எதிலும் வெற்றி பெற எத்தனிப்பாய்
எட்டப்பர்களையும்
அறிந்து கொள்வாய்

## இல்லாததைத் தேடுதல்

செவ்வாயில் உயிரினம் வாழத் தேடுகிறார்கள்
பூமியில் நிலையாய் வாழ்ந்த உயிரினங்களை
அழித்து விட்டு

## ஏதிலி

கன்னி மொட்டுக்களும்
பூக்களும் உதிர்ந்து போனது
எஞ்சியது உயிர் வாழ்வதற்காக
இடம் தாவுகிறது நீட்டுரங்களை சுமந்த படி

## யார் பக்கம் கடவுள்

விதைகளைப் புதைத்த விவசாயி மழையை
வேண்டுகின்றான்!
விறகு விற்கும் தொழிலாளி
மரங்களை வெட்டி வெய்யிலில் போடுகின்றான்!

## அம்மாவின் குரலில்

கடன் வாங்கி கடல் கடந்த பயணம்
தேடலில் கிடைத்த தோழர்கள்
குழுமி வாழ்ந்த உறவுகள்
வாடி வாழ்கிறான் வசதி
தேடி வந்தவன்
நலமறிய என்னிடம் கைபேசி
ஊர்க்கதை பேசி பசுமை உள்ளடங்கும்
அம்மாவின் குரலில்
வீட்டின் சூழ்நிலை புரியும்
கடன் காரன் வருகையால்
கவலைகள் அடுக்கிக்கொண்டே
கை மாறும்
குட்டித் தங்கையிடம் ஆவலோடு
ஆசைகளை கொட்டித் தீர்ப்பாள்
அன்புத்தங்கை சாப்பிட்டாயா?
அண்ணா என்பாள்
அம்மம்மா நீ எப்ப வாரா மகனே
ஏக்கமான வார்த்தையுடன்
ஆறுதல் சொல்ல அலையும் மனது மெல்ல
வார்த்தையின்றி
அமைதியாகும் கைபேசி

## வறுமையின் கொடுமை

அடுக்கடுக்காய் மண் பானைகள் அடுக்கியிருக்கும்
அனைத்துப் பண்டங்களும் வெறுமையாயிருக்கும்
வெற்றுப் பாத்திர மென்றறிந்தும் —பசி
மீண்டுமொருமுறை
திறந்து பார்க்கும்.

உணவு முத்திரைக்கு
உணவுப் பொருட்கள் கொடுப்பார்கள்
புழுத்து வடியும் அரிசியும்,
செக்குப் பிடித்த எண்ணெயும்
இலை கொலையும் பறித்து
சில நாட்கள் பசிபோக்கும்.

புன்னகையெல்லாம் மண்
பானைகளுக்குள் மூடியிருக்கும்
காட்டெலிகள் நிலத்தைக்
குடைந்து வீட்டுக்குள் குடியேறியிருக்கும்
துணிமணிகளை உண்டு மகிழ்ந்தும்
ஆசையாய் வாங்கிய
சான்றிதழையும் பதம் பார்த்திருக்கும்
அடுப்பங்கரையில் நாய்
சுருண்டுறங்கும்
பரண் மேல் பாத்திரங்கள் உலரும்...
பொழுதுகள் வழமை போல புலரும்
ஏழைகளின் வறுமை பொழுதுகளுக்குள்

## இயற்கையைத் தத்தெடுங்கள்

மரங்கள் நட்டுவோரைக் கண்டால்
ஆதரவு அற்றோரை தத்தெடுத்து
வளர்ப்பவர்களாக நினைத்து மகிழ்கின்றேன்!
மரங்களை வெட்டுவோரைக் கண்டால்
பெற்ற குழந்தைகளைக் குப்பைகளில்
போடுபவர்களாக எண்ணி நெகிழ்கின்றேன்!

## முடிவில்லாத பாதைகள்

பயணங்கள் முடிந்து விடும்
பாதைகள் முடிவில்லாமல்
முட்டுக்கட்டைகளாகிவிடும்

விடியலும் மறுபடி விடிந்து விடும்
நாட்கள் விரைவாக கடந்து செல்லும்
காலம் தாண்டிய வாழ்வு
காலக் கணக்கு முடியும் வரை

மனிதன் சாதிக்கின்றான் அவன் உனக்கு
நேற்று செய்ததை
நீ அவனுக்கு இன்று சாதிக்கிறாய்
சாவுக்குப் பின் எதை சாதிப்பான்
சிந்தனையில்லா மனிதன்

சந்ததி உனைப் பற்றிப் புகழ்ந்து
சிந்திக்கச் சாதனை செய்
விடிகின்ற விடியல்
எதற்காக என யோசி
விடியலை விரயமாக்காது யாசி.

## 02. மறக்க முடியாத வீரம்

### கலகம் செய்தவர்கள்

தலைமுறை வாழத் தயங்காது போர் புரிந்து
வாளைக் கையிலேந்தி வந்தவனை வதம் புரிந்து
சுதந்திர வாசல் அமைத்தார்கள்
சுதந்திர சுவாசம் சுவாசிக்கவே
சுவாசங்களை விட்டார்கள்

ஆதிக்க வாதியிடமிருந்து சுதந்திரத்தை மீட்ட
சுதந்திர வாதிகள்
அடக்குமுறையை அடக்கவே
முன்னரண்களாக நின்றவர்கள்
சொர்க்க பூமியாக மாற்ற
நட்சத்திரங்களாக மின்னுகின்றவர்கள்

வல்லாதிக்க சக்தியோடு
வெல்வோமென எழுந்து
பண்பாடு கலை கலாசாரம் சிதையாமல்
காக்க சீறி எழுந்தவர்கள்
பொன் எழுத்துக்களால் வரலாற்றில்
பதிந்தவர்கள்

பாட்டன் முப்பாட்டன் பெற்றுத்தந்த சுதந்திரம்
பட்ட பாடெல்லாம் வீரமாய் ஏந்துவோம்
வடுக்களை சுவடுகளாய் மாற்றிய எம்
முன்னோர்களை பற்றி அறிவோம் ஆயிரம்

சொடுக்குப் போட்ட சண்டியர்களை
கொடுக்கு கட்டியே விரட்டிய மாந்தர்கள் அவர்கள்
ஆயிரம் ஆயிரம் வீரர்களை அணி சேர்த்து
அகிம்சையாலும் அறப்போராலும்
அன்னை மண்ணைக் காத்தவர்கள்
ஆண்டுகள் பல அயராது உழைத்து
இல்லறம் துறந்து உன்னதத்துக்காய்
உயிர் நீத்த தியாகிகளின் புகழ் பாடிடுவோம்

மாற்றான் கைப்பிடிக்குள்
மாட்டிய பாரதத் தாயை மீட்டது சுதந்திரம்
பல மரண ஓலத்தின் பின்
மலர்ந்தது சுதந்திரம்
அந்நியன் நவீன கேடைய வெட்டுக்களை
வீரத்தழும்புகளாய் ஏந்த வைத்தது சுதந்திரம்
சாதிகளைக் களைந்து
சாதனை படைப்போம்
பெண்ணடிமை நீக்கி
பொன்னுலகாய் மாற்றுவோம்
அநாதை என்ற சொல்லை
அகராதியிலிருந்து அகற்றுவோம்
எதிர்காலம் தந்த முன்னோர்களை
எட்டுத்திசையும் விளங்க பறை சாற்றிடுவோம்....

**(சென்னையில் நடைபெற்ற புத்தக கண்காட்சியில் தெரிவான கவிதை-2015 )**

## இவர்கள் விழவின் ஒளிப்பிளம்புகள்

முறத்தால் புலி விரட்டிய
மறத்தாய் பெற்ற வீரமாதுக்கள்
சிரம்தாழ் பதியாத
வீரப்பரம்பரை இனத்தோர்
சிறக்கும் வாழ்வென
செங்களம் விரைந்த வீரர்கள்
சேனையில்
மணாளனின் பணியை மகிழ்வாய்க் களித்த
வீர மாதுக்கள்
வீரமரணம் கண்டு மனையாள் படும் துயரம்
சொல்லால் எழுத இயலாது
கல்லாக்கி மனதை
நல்லதை வேண்டித் தொழுவாள்
வல்லவனாய் சேயை வளர்த்தெடுத்து
வாள்வீச்சுக் கற்றுக் கொடுப்பவள்

வெள்ளைப் புடைவையாய் மாற்றிய
வேலையில்லா மனிதனின்
வெற்றுப்பேச்சை மாற்றி
பற்றுணர்வை பற்ற வைப்பாள்
கொடும் துயர் மீளுமென
படும்துயர் மீட்டிருப்பாள்
பகலவன் இழந்த வானமாய்
இவள் முகமிருந்தாலும்
மறு நாள் உதிப்பானென்ற
நம்பிக்கையில் வாழ்வாள்
விதவைகளென்றுரைப்போரின்
விதைகளைக் களைய வேண்டும்

வீரத்தின் பிறப்பிடங்களை
விளைபூமியாய் போற்றிட வேண்டும்
சரித்திரத்தின் வீரத்தழும்புகளை
சரித்திரமாய் மாற்றிட வேண்டும்
இவர்கள் விதவைகள் அல்லாள்
எங்கள் விடிவின் ஒளிப்பிளம்புகள்
மறத் தாயை விஞ்சி
சிரம் போல் ஓங்கி நிற்பவர்கள்
அழுகையிலும் ஆயிரமாயிரம்
காரணங்கள் புனைந்திருப்பார்கள்
எங்கள் வீரமாதுக்கள் ....

## ஒன்று படு தமிழா

விழிகளைத் தானம் செய்த பின்புதான்
விளக்கேற்றினார்கள்
விழிகளை இழந்தவனிடமே
ஓவியம் வரையச் சொன்னார்கள்
உரக்கச் சத்தமிட்டு அழுதோம்
உரிமை பறிபோகிறது என்று
மௌனமானார்கள்

வலிகளின் தாக்கத்திலிருந்து
விடுபட்ட போதுதான்
ஆறுதல் உரைத்தார்கள்
எல்லாம் இழந்த பின்புதான்
அல்லோலப்பட்டு அழுதார்கள்
வென்று விடாத போது தான்
ஒன்று பட முயற்சிக்கின்றார்கள்
முன் வரவில்லை

# அழியாத கவிதைகள்

நான் ஜனனித்த போது
என் அழுகையோசை
என் தாய்க்குக் கவிதை

நான் முதல் உச்சரித்த
கவிதை "அம்மா"
பாவையின் பாதத்தால்
ஏறிமிதித்துக் கடந்து
சென்ற போது
நான் அழுத
வார்த்தையும் கவிதை

விதி என்னைத்
துரத்திய போது
விம்மி விம்மி
நான் அழுத வார்த்தையும்
கவிதை...
சமூகம் எனைத்
தள்ளி வைத்தபோது
தலை குனிந்து
அமுக்கமாய்
அடக்கி வைத்த
அவமானங்கள்

கொப்பளித்த வார்த்தைகளும்
கவிதைகள்..
தனக்காகயில்லாமல்

பிறருக்காய்
தன் வாழ்வை
அர்ப்பணம் செய்து
கண்மூடி ,
கண்மூடாது போனவர்களின்
கனவுகளும் கவிதைகள்
அவை ஒருநாள்
நனவாகும் போது
அவர்களே அழியாத
கவிதைகள் ....

## தியாகிகள் வாழ்க

இளையோர் கலங்கரை விளக்கு
உயர்ந்திட வேண்டும்
முன்னோர் ஈட்டிய பண்பு வழிகள்
தொடர்ந்திட வேண்டும்
பழந்தமிழ் மாற்றான் ஆதிக்கத்திலிருந்து
அகன்றிட வேண்டும்
பைந்தமிழ் பரவசமாய்
பரவிட வேண்டும்

புலமை தந்த பழையோரின் புகழை
உலகறியச் செய்வோம்
புலமையை உள்வாங்கி
நலன் பெறுவோம்
தேன் தமிழைப் போற்றிக்
கொண்டாடுவோம்
தன்னிரகற்று செயலாற்றுவோம்

பண்பாட்டுக் கழகம் அமைத்து
மேன்மையாய் தமிழைப் பாடி
தொன்று தொட்டு நாம் வாழ
சான்றாய் விட்டுச்சென்றோர் வாழ்க!
தொன்மை அணையாது
தொண்டுகள் புரிந்த எம்மவர் வாழ்க!

வளம் பெற பாடுபட்டோர் வாழ்க!
களம் சென்று துயர் துடைத்தோர் வாழ்க!
ஆடல், பாடலுடன் அழகாய் மிளிர்க!
மேள தாளங்கள் பண்ணாய் ஒலிர!

விதை, விருட்சம்
முதுமையின், புதுமையாக
பாதைப்பயணம் தவறாது பயணிக்க
சமூகக் கழகத்தில் அங்கமாய் நாமும்
சமுத்திரம் போன்று களங்கமற்று நாளும்
மாற்றத்தில் நீயும் மயங்கிக்கிடவாதே
சுற்றத்தில் நீயும் ஒற்றனாய் இராதே!

## வாழ்வு தந்த தெய்வங்கள்

சொல்லுக்கு முன் செயலாக இரு
வில்லுக்கு முன் அம்பாய் இருந்து புறப்படு
குறி எதிரியின் மார்பு புலனாகட்டும்
நெறி தவறாத போர் வீரனாக இரு
சந்ததி காக்க முந்து நீ
சந்நிதி தொழுது சாந்தமாய்
இருந்து விடாதே
முயற்சியின்றி தெய்வ சக்தி உயிர் பெறுவதில்லை
என்றுரைத்து
ஒப்பற்ற இனத்தைக் காப்பாற்ற
உன்னதமாய்க் கடமை செய்தவர்கள்
இகழ்ந்துரைக்க அனுமதியோம்
புகழ்ந்துரைக்க போற்றுதலானவர்கள்

சாதி, மத பேதமின்றி
சரித்திரம் தொட்டவர்கள்
நாதியற்று அலைந்தோரை
நல்வழி புகட்டியவர்கள்
சாகா வரம் பெற்ற
சரித்திர மனிதர்கள்
வீரம் புகட்டி
விண்ணெய்த விண்ணோர்கள்
விடியும் வரை முடியுமென்ற
ஓர்மையுடன் போரிட்டவர்கள்

மரணம் தனதருகே
என உணர்ந்தும்

மானமே
பெரிதெனக் கொண்டவர்கள்
தமிழர் என்றால்
தலை நிமிர்ந்து வாழ்வோர்
என இடித்துரைக்க வைத்தவர்கள்

வடியும் குருதியிலும்
வதைபடும் எதிரி குண்டுமழையில்
வாழ்வெனக்கூறி வாழ்ந்தவர்கள்
வடுக்கள் தந்த கொடியோனை
சுடுகுழலால் சுட்டு வீழ்த்தியவர்கள்
விண்ணிலிருந்து விடி வெள்ளியாய்
விடியல் தருபவர்கள்
மண்ணின் மகத்துவத்தை
உணர்த்திய மாமேதைகள்
வரலாற்றில் அழியாமல் அமர்ந்தவர்கள்
என்றும் எங்களுக்குள்
கடவுளாய் இருப்பவர்கள்

**- உலகப் பாவலர் மன்றம் நடத்திய போட்டியில்**
**தெரிவான கவிதை, 2015.**

# அழாதே அம்மா

அழாதே அம்மா
இன்றுவரை ஏன் அழுகின்றாய்
என்றும் அழாதே அம்மா
சென்றால் வருவோமா என்றே சென்றோம்...!
சென்று போய்.!
வென்று வருக என்ற வரை
எவ்வாறு மறவோம்...!

அழாதே அம்மா
நீ பொத்திப் பொத்தி வளர்த்தாய்
தலைவனோ
தோளைத் தட்டித் தட்டி வளர்த்தார்
இருவரும் எமக்கு ஒன்றல்லவா...?
நான் வீழ்ந்து போனேனா..?
நீ விம்மி அழுவதற்கு
நான் தாயின் கருவறைக்குள்
இன்னுமொருமுறை கருவாயிருக்கிறேன்.!
இன்னுமொருமுறை பிரசவிக்கயிருக்கிறேன்..!
நீ அழலாமா?
நாம் உங்களை மறவோமா..?

அழாதே அம்மா
உன்னிடம் யாரோ
பொய்யுரைத்திருக்கின்றார்கள்
நான் மரணித்து விட்டேனென்று..!
மரண தூது தாங்கி வந்த மடலை விரித்துப்பார்...!
உன் பிள்ளை விழவில்லை
புதிதாய் பிறந்து வருவான் என்றல்லவா
இருக்கின்றது !!
நான் தாயின் கருவறைக்குள்
இன்னுமொருமுறை கருவாயிருக்கிறேன்...!
மீண்டும் உன் மடியில் மகனாகப் பிறப்பேன்...!
அழாதே அம்மா மெதுவாய் எழுந்து செல்...!
உன் கண்ணீரைக் கொஞ்சம் விட்டுச் செல்...!

## இருக்கும் இடத்தில் இருப்பது இருந்தால் எதுவும் நடப்பதில்லை

அலட்சியம் இருக்குமிடத்தில்
இலட்சியம் இருப்பதில்லை
விட்டுக்கொடுப்பு இருக்குமிடத்தில்
பிடிவாதம் இருப்பதில்லை
பொறுமை இருக்குமிடத்தில்
கோபம் இருப்பதில்லை
பொறுப்பு இருக்குமிடத்தில்
வீண்விரயம் இருப்பதில்லை
தைரியம் இருக்குமிடத்தில்
பயம் இருப்பதில்லை

**-தமிழகத்தில் வெளிவரும் பாக்யா வார இதழ் பிரசுரமானகவிதை - 2015.**

## நீ நாளைய வரலாறு

நீ ஒரு வரலாற்றைப் படித்திருப்பாய்
நீ ஒரு வரலாற்றைப் படைத்திருப்பாய்
நீ ஒரு வரலாறாக வேண்டுமெனில்
நீ படித்த அந்த வரலாற்றில்
நீ படைத்த அந்த வரலாற்றில்
நல்ல படைப்பாக நீ மாறினால்
நீ நாளைய வரலாறு

## எப்படி மறப்போம்

மண் வாசனை இழந்த தேசம்
வாய் விட்டுச்சிரிப்பதை
நிறுத்தி விடச்சொல்லி உபதேசம்

ஆளுக்கொரு கண்டனம்
அடங்கிடாத பேரின வாதம்
மண்ணாசை பிடித்தவனிடம்
வாழ்வாதாரம் கேட்டு
பல்லாயிரம்
புனிதர்களை விதைத்தோம்
வானோர்கள் வாழ்ந்த இடங்களில்
வன நரிகள்
சுகந்தம் நிறைந்த இதயபூமி
சுடு காடாய்ப்போனது

குடிநீர் பெற மண் தோண்டினால்
மனித எச்சங்கள்
சுய உரிமையை வேண்டினால்
அச்சுறுத்தல்கள்
பல்லாயிரம்
துரியோதனன்கள் வாழும் பூமி
அங்கு தமிழனே சகுனி
நாங்கள் எப்படி மறந்து போவோம்;
எதை ஏற்று ஒன்றிணைவோம்.

## இன் தமிழ் எழுத்தாளர்களே வாழ்க !

மனதில் பதிந்த பாறையொன்று
நீர் கசியும் வார்த்தைகளை
உதடுகளால் வடித்தெடுத்து
எழுதுகோல்
ஏட்டில் பதிக்கும் கணம்
ஒழிந்துகொள்ளும் வார்த்தைகள்
எத்தனை
ஆழப்பதிந்த ஆழ்மனதில்
அன்புக்கு அடைக்கலமாக
ஆண்டு வந்த தேசத்தில்
தேடிப் பார்த்த தேசத்தில்
மர்மமாய் மறைந்து போன
மகிமைகள் எத்தனை ?

மனக் கரும்பலகையில்
மனதின் கஷ்டங்களை
மனப்படமாக்கி வைத்த
கதையொன்று காரணமில்லாமல்
கவிழ்ந்த கதைகள் எத்தனையோ
இத்தனைக்கும்
அத்தனைக்கும்
எத்தனிக்கும்
வரி தொடுக்கும் அகராதிகள்
உயிராகி
எழுத்தாகி, ஏடாக்கி
எட்டிப்பார்க்கும்
கவிப்பெட்டகத்தில்
தேடிப்பார்க்கும் கலைகளை
படிக்கும் போது
எத்தனை அருமை
அத்தனையும் இயற்றிய
எழுத்தாளருக்கு
இன் புகழ் இதுவே.

# நந்தவனத்தேரு எங்க ஊரு

நந்தவனத்தேரு எங்க ஊரு
நல்லவனாய் வாழ்ந்து
வாங்கணும் நல்லபேரு

ஆற்றங்கரைக் காற்று
வந்து வனப்புடன் மோதும்
ஆலமரக்காற்றுப் போல
ஆனந்தமாய் மனசு குளிரும்
பசுக்கள் கூட்டமும்
வயல்வெளிகளும்
பசுமையாய்த்திகழும்
பசியோடு வருவோரின்
பட்டினியைப் போக்கும்

சாணம் மெழுகிய திண்ணையில்
சந்தனம் மணக்கும்
சலனமில்லாமல் சாந்தமாயிருக்கும்
அனாதை யெனயாருமில்லை
அணைக்கும் அம்மாக்கள்
இருக்கும் ஊரினிலே
முன்னவன் வகுத்தானென
பின்னவன் புறக்கணிக்காத
பண்பாடு, கலாசாரம் விழுமியங்களை
விஷமிகள் கூட்டம்
இல்லாதொழிக்க வந்தால்
எங்கள் ஊர் நன்றியுள்ள
பிராணிகூட கடித்துக் குதறும்

சுயம்பு 2015

## எல்லாள மன்னன்

எல்லாளன் எங்கள் குல மன்னன்
சொல்லால் வீரம் புகட்டாது
வில்லால் வீரம் படைத்த மன்னன்

தாழ்ந்த தமிழை ஓங்கச்செய்தவன்
வீழ்ந்த இனத்தை வரலாறாய்
பா பாடச்செய்தவன்
பண்பாட்டைப் பேணிக்காத்தவன்
துன்புற்றோரை இன்புறச்செய்தவன்
வனப்பாய் இயற்கையை
மனப்பாயில் மகிழ்வாய்க் கிடத்தியவன்

எதிர்த்தவன் எவராகினும்
அதிர்வாய்ப்புடம் போட்டவன்
துட்ட படைகளை
நட்டம் காணச் செய்தவன்
முதிர்ந்த அகவையிலும்
உதிராத ஆளுமையோடு
வேடர்குலத் தலைவனோடு
தடம் புரளாது போர் புரிந்தவன்

சதி கொண்டு அவனின்
விதி தனை முடித்தனர்
வென்றவர் புகழைப் பிரபஞ்சம்
கொன்றவராய்த் தூர்த்தினர்
சதி தந்த வெற்றிச் சாதனை படைக்காது

விதியென்று அலைந்தால் விடையேதும் கிடைக்காது
சரித்திரத்தை எந்த சந்ததியும் ஒதுக்கிடாது
தரித்திரம் பிடித்தவனோடு
எந்த உயிரும் இணைந்திடாது
வாழும் தமிழ் வையகம் முற்றும் வரை
வெல்லும் தமிழ் கலியுகம் மாறும் வரை.

## வந்த காகம்

வந்தகாகம் இருந்த காகத்தை
விரட்டுகின்றது
இந்த செய்தியறிந்தும்
யாவையும் மௌனம் காக்கின்றது
தஞ்சம் புகுந்தகாகம்
வாழ்ந்த இனத்தை ஏதிலியாக
ஏளனம் செய்கின்றது
நெஞ்சம் கொண்ட அனைவருமே
நெருங்கி வரவில்லை
பல வழியிலும் வட்டமிட்டுக் கரைந்தும்
திட்டமேதும் பலிக்காமல்
நீதி தவறிப் போயிற்றேயென
விம்மிக் கரைகின்றன.

## இளமையின் கல்வி

இளமையின் கல்வி
இறைவனின் வரமாகும்
முதுமையானாலும்
சிறப்புடன் நிலையாகும்
குறையாத பெருஞ்செல்வம்
நிறைவாக என்றும்
நிலைத்திடும் செல்வம்

கோடி பணம் இருந்தாலும்
அழிந்திடலாம்
தேடிக் கற்ற கல்வி நீடிக்கும்

ஆருயிரை விட மேலாகும் கல்வி
கல்வியை விற்று
பிழைத்திடும் மாந்தர்கள்
நிலைத்து நிற்பாரில்லை
கற்றதைப் போதித்து
ஏற்றழிவின்றி
கல்வெட்டாய் வாழ்ந்திடு

அறிவுக்கு மேற்பட்டவன்
ஊட்டிய அறிவால்
உலகமழிந்திடும்
தெளிஞனாய் இவ்வுலகிலிருந்து
தெளிவுறச் செய்
கீர்த்தி உன்னுடன் அழியாதிருக்கும்

பேரறிவால் பேரொளி வீசி
சிறப்பான கல்வியறிவு நவில்ந்து
கீர்த்தியுடன் வாழும்
மற்றவரை இகழ்ந்து பொய் பேசி
நல்லவராய் வாழ்தல் என்பது பொய்ப்பேச்சு
ஆரம்பக் கல்வியே அறிஞராய் மாற்றும்
அன்பும் அறனும் நல்கி
பண்பாளனாக வாழ்வாயாக.

- **தினக்குரல் 2017.**

# கனவுகள் மெய்ப்பட வேண்டும்

தாய் கைபிடித்து நடந்த தாய் மண்ணில்
மீண்டும் என் சேய் பிடித்து நடந்திட வேண்டும்
இரத்தினமாய் மிளிர்ந்த என் தாய்த்திரு நாடு
மீண்டும் மிளிர வேண்டும்

மொட்டுக்கள், பூக்கள், காய்கள், பழங்கள்
மலர்ந்து விளையாட வேண்டும்
நாடகதாரிகளின் முகத்திரை கிழிந்திட வேண்டும்
நாட்டுமக்கள் நலமாய்ச் செழிக்க வேண்டும்

பெரும்பான்மை, சிறுபான்மை என்ற
பிரிவினைவாதமின்றி நலம்பெற்று வாழ்ந்திட வேண்டும்.
என் அழகுத் தமிழால் பதாகைகள்
பதிந்திட வேண்டும்

பிச்சைக்காரர்கள் இல்லாத நாடாய்
எம் தாய் நாடு இருக்க வேண்டும்
உண்டியல் இல்லாத கோயில்கள் இருக்க வேண்டும்
ஆசை எனும் பெரும் அழுக்கு
அகன்றிட வேண்டும்

அன்பும், பண்பும் நிறைந்த
தாயகமாய் திகழ்ந்திட வேண்டும்
இன சுதந்திரத்திற்காய்ப் போராடி
மாவீரர்களான எங்கள் மறவர்களின்
கனவுகள் மெய்ப்பட வேண்டும்.

**- தினக்குரல் 2017.**

## ௦3. பூக்கும் பூவின் வாசம் காதல்

### நம்பிடாத நாயகி

ஆணிவேர் உள்ள மரம்
அடியோடு சாய்ந்தாலும்
ஆலமரம் என்னிதயம் – உனை
அணைத்திட மாட்டாதடி

பொய்யான காதலென்று
பொய் வேஷம் போட்டாயடி
மெய்யான காதலிது – நம்பு
பெண்மை மலரே நீ
பொய்யாக காதலிக்காதே

கடல் வற்றிப் போனாலும்
அதில் நீ பயிர் செய்வதைத் தந்திராது
ஆணின்றி நீ வாழ்ந்திட்டாலும்
ஆண் வர்க்கம் உனை ஏற்றிடாது

நீயின்றி வாழ
என் இதயம் தாங்கிடாது
உனையொன்றும் நான் மறவேன்
ஒரு துளி நீர் விடுவாய் என்றால்
இந்த மரணம்கூட வேண்டாமடி

உன் காலடியில்
எனை சமாதியாக்கு சமாதியில்
ஒரு ஜன்னல் வைத்து
இமை மூடாமல் பார்த்திருப்பேன்.

**(26.10.2008. வீரகேசரி)**

## சிகரட்

பேதையின் பாதச்சங்கொலி
பேசாமற் போனதால்
போதையின் வாசலில்
போதிக்க நானமர்ந்தேன்
உள்ளூறுஞ்சும்
புகைமண்டலங்கள்
அவள் பதிந்திருந்த
உருவச்சிலையை
மறைப்பதற்காக உருப்பெற்ற
சிகரட் துகள்கள்

என் இதயத்தை
உரசி விட்டு
உயர்ந்து செல்கிறது
மேகங்களோடு
சேர்வதற்காக மட்டுமில்லை
என்னையும் அங்கு
சேர்ப்பதற்காக
என் ஆயுள் கணக்கை
நொடி நொடியாக
குறைக்கும்
மரணக் கோள் கூட
மாதுவின் நினைவுகளை
தாங்கிப் பார்க்கிறது
முடியவில்லை
அவள் நீந்தி விளையாடிய
நினைவு நீர்த் தடாகம்

நீர் வற்றிப் போகிறது
ஆதலால்
புகைச் சுருள்கள்
புன்னகை வடிக்கிறது

பஞ்சமில்லா முத்தங்களுக்காக
காத்திருந்த உதடுகளிரண்டும்
பற்றிப் பிடிக்கிறதே
புகை வடிக்கும்
பஞ்சுப் பக்கத்தை
நெஞ்சு துடிக்கும்
வலியின் பக்கத்தை
யார் புரட்டிப் பார்ப்பது

உற்றுப் பார்த்தன்று
உடல் சேர்ந்தாள்
காதல் ஊற்று நோயாக
விட்டு சென்ற
கணத்தில் தீராத
புற்று நோயாக
இன்று காத்திருப்பது
அவளுக்காக அல்ல
என்னை நம்பிய
உறவுகளுக்காக
தூக்கி வீசப்பட்டது
சிகரட்

-வீரகேசரி, 05.07.2009.

## அதிசயமான காதல்

நடுக்கடலில் அமுக்கம்
ஆட்சி செய்ய
அவளிடம்
அமுல்ப் படுத்த முடியாத
என் இதயம்
புன்னகை
அவதாரம் எடுக்க
புயல்க் காற்று
இரு இதயத்திலும் வீச
பூவான அவள்
முகம் மலர்ந்ததே !
மொழியில் ஒப்புதல்
இரு இதய இசைத்தட்டில் முழங்க
வலி பிறந்த காதல்
இன்பவியலோடு நகர்ந்தது
சந்தேக புதைகுழியில்
விழுந்த தென்று
விரிசலுடன்
ஆட்டி வைக்கிறது

## நண்பன்

நண்பனைப் போல் ஒரு சொந்தமில்லை
நன்றியால் இவன் கடன் தீர்வதில்லை

கடவுளாய் ஒவ்வொன்றைத் தொடக்கி வைப்பான்
எக்காலத்திலும் அழியாமல் நண்பன் நெஞ்சில் வாழ்வான்

காதலும் சிலநேரம் சேர்வதில்லை
சாதல்வரை நண்பன் என் நெஞ்சிலிருந்து பிரிவதில்லை.

# என் இனியவளின் பாசம்

எங்கேயோ கேட்ட குரலில்
எப்படியோ இடறி விழுந்தேன்
எகிறிக்குதித்து எந்தன் இதயம்
எட்டிப் பார்க்க நினைக்கும் அவளை
தாயின் பாசம் மாறவில்லை
அவளின் பேச்சில் கண்டுகொண்டேன்
ஹலோ என்ற வார்த்தை கூட
வாலி வடித்த கவிதை போல
சேகரித்து வைத்த நினைவை
நிஜப்படமாய் காண்கிறேனே

அனாமிகாவாக வந்த பெண்ணை
அன்னையாக பார்க்கின்றேனே !
அவள் அருகில் கூட அமர்ந்ததில்லை
உறவுகளாய் வாழ்கிறோமே !!!
இனியவளின் குரலைக்கேட்ட
குயிலினங்கள் கூவக்கூட
வெட்கம் கொள்ளும்
அவளைக் கண்டு கொண்டு
கண்ணைமூட
சேர்த்து வைப்பேன்
உயிரைக் கொஞ்சம்.

- 2008.

## பவித்திரமான பாசம்

தேவலோகமும் சொல்கிறது
இதிகாசமும் சொல்லிக்கொடுக்கிறது
தாய் தான் தெய்வத்தை விட
மேலானவளென்று

என் பாசமும் பரிதவிக்கின்றது
உன் நேசம் காட்டிக்கொடுக்கின்றது
பவித்திரமான உன் அன்புக்கு
கடன் காரன் நானென்று!!!
உன் நெஞ்சில்
என் பிஞ்சுப்பாதங்கள்
பஞ்சு போல் தைத்ததா தாயே!
எனக்கு உன் பாசம்
நெஞ்சமெல்லாம் அமிர்தமாய்
சுரக்கின்றது அன்னையே
எனக்காக எத்தனை
எண்ணங்களை எறிந்திருப்பாய்
உன் இளமையை
எனக்காக செலவழித்து விட்டாயே
உன் நரை முடியும்
உற்றுப்பார்க்கும் பவ்விய பார்வையும்
கட்டித் தழுவயில் நீர் சொட்டும்
கண்ணீர்த் துளியின் ஈரப்படர்வும்
காட்டிக் கொடுக்கிறது
உன் பாசத்தின் ஆழத்தை .....

## மர்மமான அவள் காதல்

பாலை வனத்தில் பனி பெய்தது
அவள் இதயத்தில்
ஈரம் தெளிக்கவில்லை.
அறைக்குள் மழை வந்தது
அவள் மனம் காதலுரைக்க
சொல்லிக் கொடுக்க வில்லை.

கதியற்று உலாவும்
காதல் உல்லாசம்
உறைந்து கிடக்கும்
உறவின் கதைகள் .

காட்சி தரும் ஒளியும்
மறைந்து போனது மர்மமாய் .
ஏன் என்று தெரியாது
விட்டுப் போன காதல் .
தேடிக்கிடைக்காத அவள் விலாசம்
எண் சுழற்ற முடியாத
அவள் நினைவுகள் .
புதைந்த மர்மக்கலை
கற்றுக்கொள்ள முடியவில்லை
மாயமான அவள் காதல்
மறைந்திருந்து கொல்கிறது.
விளம்பரப் படுத்தாத
விலைப்பொருள் போல
இலட்சணை காண முடியாத காதல்
இறுதி வரை காத்திருக்க வைக்கின்றது .
மர்மமான அவள் காதல்.

## நித்தமும் உன்னை பார்க்க ஏங்கும் மனது

கனவுகளால் உதிர்த்தெடுத்து
கற்பனையால் கவி வடித்து
காலமெல்லாம் உன்னோடு கலந்து
காதோரம் வந்து பேசும் நிமிடத்தில்
நிஜத்திலும், கனவிலும்
என்னை புரட்டிப் புரட்டி புன்னகை
வடிக்கிறது!

நித்தம் பார்க்க ஏங்கும் மனம்
கடவுள் சித்தம் என்னவோ !
காலம் தாண்டியே போகிறது
கனவில் பகிர்ந்திடும்
முத்த அமுதத்தின்
எச்சில்துளி கூட இனிக்கிறது!

உன் புகைப்பட உரு என்னைப்பார்த்து
கண்ணசைக்கிறது...!
திகைத்தெழுந்து திரும்பப் பார்த்தால்
பிரம்மையாகிறது !
இதயத்தில் எத்தனை இடைவெளிகள்
உன்னோடு பேசுவதற்கு.

## கனவு காணும்போது...

இமைக்கும் போதும் இனிமையற்றுத்
தூங்கும் போதும் தேங்கிய
நிழல் துள்ளித்திரியும்
சொர்க்கத்தில் மிதக்க வைக்கும்
சொப்பனம் ஆட்சி செய்யும்
முகவரி தொலைந்த
காதல் உறவுகள்
கனவில் ஊற்றெடுத்து உறவாடும்
நினைவுகள் நனவாகும்
எண்ணிப்பதிந்த
ஏவல் ஏழிசை பாடும்
திக்கித் திணறும்
காதல் தித்திக்கும்
அவளும் அவனும் ஆனந்தத்தில்
அலை மோதினர்

தொட்டாற் சுருங்கி
அவள் சேலையை
பற்றிப் பிடித்து
இழுக்கின்ற போதும்
உறங்காமல் அவள் அழகை
பார்த்து ரசிக்கும் சுருங்கி
பறவைகளின் கூச்சலில்
விழி கசக்கி எழுந்திட
விடிந்திடுமே! இரவு
கலைந்திடுமே அவன் கனவு
கனவு காணும் அவன் காதல்
நகர்ந்து செல்லுகிறது
அவளைத் தேடி...

## காதல் கதை பேசி

கைபேசி
கன்னம் வரை வந்து
காதல் கதை பேசி
கனவுகளில் பல தடவை வந்து
காதல் தென்றல் வீசி
அவள் செல்லக்குரல் கேட்க
மெல்லச் சிணுங்கும்
தொலைபேசி
அதிவேகமாக விரையும் நிமிடங்கள்

உயர்ந்த உயர்ந்த கட்டிடங்கள்
பயந்து பயந்து வேலைப்பாடுகள்
அவள் நினைவுடனும்
எதிர்கால கடமையுடனும்
நகர்கின்றது வாழ்க்கை

வித விதமான ஆடம்பரங்கள்
புதுப்புது நவீனத்துவங்கள்
அங்கே எனது உருவவிம்பம்
இங்கே அவளது உருவவிம்பம்
உலா வந்த வண்ணம்
உரையாடல் அளவலாகும்
சிறு சிறு பிடிவாதச்சண்டைகள்
நீ எனக்கு வேண்டாம்
நான் போறேன் என்றெல்லாம் பிரிவுகள்
சில நிமிடங்கள் கழித்து
சிறு அழைப்புக்கள் தீண்டும்
முரண் பாட்டைத்தீர்க்கவே !

குளக்கரையில் காத்திருக்கவைத்து விட்டு
தந்தை தொலைந்ததென்று
அழுத குழந்தையாக
தூரத் தொலைவில்
நானும் அவளும்
தொலைந்து கிடக்கின்றோம்

அன்பு துவட்டிய
காலை வணக்கம்
தகவல் பெட்டிக்குள்
காத்துக்கிடக்கும்
தினசரி எனது தகவல்
பிரிவுச்சித்திர வதைகளை
மூடி மறைத்த படி
தினம் தினம் தொடரும்,
பல வருடத்துக்குப் பிறகு
பார்க்கச் செல்கின்றேன்
என்னைக் கண்டவுடன்
விசும்பி அழுது விட்டாள்

காதல் சுமையுடன்
கல்யாண அன்புச்சுமையை
ஏந்துகின்றேன்...
மறுபடி பறக்க
தொடங்கி விட்டேன்!!
என்றாவது ஒருநாள்
வாழ்வு சிறக்குமென்று
அன்று பிரிந்ததைப்போல அல்லாது
எனது பிரதி விம்பத்தையும்
விட்டு விடுகின்றேன் அவளுள்.....

## அந்தக்கால நினைவுத் தடங்கள்

அம்மாவின் விரல் பிடித்தெழுந்து
நடை வண்டியில் நடை பழகி
நொங்கு வண்டி உருட்டி ஓடி
அப்பாவின் மிதிவண்டியை ஓடிப்பாழாக்கி
காடென்ன கரம்பென்ன
கால் படாத இடமென்ன

வெட்டை வயலில் வேட்டையாடி
கட்டைப்பந்து அடித்து விளையாடி
பள்ளிப்பாடம் ஏறவில்லை
சொல்லித்தந்தாலும் பிடிக்க வில்லை
அறிவுரை வழங்கினால் ஆவேசம்
சில்லறை கொடுத்தால் சந்தோசம்
ஊதாரியென்று ஊரெல்லாம் பேச்சு

ஒப்பாரியென்று வைத்ததேயில்லை
பட்டப்பேரு அன்று வத்தோம்
இட்டபெயரை இப்ப சொன்னா ஊரு சிரிக்கும்
மழைக்குக் குடை பிடித்ததில்லை
வெயிலுக்கும் நிழலில் நின்றதில்லை
புழுதிக்கும் மூக்குப்பிடித்ததில்லை
சகதியையும் எட்டிக்கடந்ததில்லை
சாதியையும் பார்த்ததில்லை
சம்பிரதாயமும் கேட்டதில்லை
எல்லாமே எங்களுக்கு ஒன்றுதான்
இலவசக் காற்சட்டை இடுப்பில் கிடக்கும்
அரைஞான் கயிற்றில் ஊசி கிடக்கும்
ஆசையெல்லாம் அடுக்கிக்கிடக்கும்
ஆனந்தமான காலமன்று
அந்தக்காலம் இன்று மலை ஏறிப்போயிற்று

# அழகில் தடுமாறிய இதயம்

மெல்லிடை மேனியில்
சல்லடைத் துப்பட்டா
கண்ஜாடை சைகையில்
அங்கோடைப் பாசையில் அலையவிட்டது
படை வீரனும் கடைக்கண்
பார்வையில் தோற்றான்
கன்னத்தில் ஓரமாய்
சரிந்து கிடந்த கூந்தலில்
என்னவென்று சொல்லுவேன்
தென்றலின் அளவலாவலை
வாடையொன்று தடவியிருந்தாள்
சுகந்தத்தில்
சொர்க்கமென நினைத்தேன்
இடையின் வேலைப்பாடுகள்
குறையில்லாதிருந்தது
நடையின் அசைவில்

நழுவியது இராத்திரிகள்
அவளுக்கென்று நெய்த புடைவை
தனக்கென்று இடத்தைப் பிடித்திருந்த
அலங்கார வடிவங்களில்
அணிந்திருந்த பாதணி
குதிரை நடைபோல சத்தம்
கையில் வானவில்லின் யுத்தம்
வெல்வெட்டு மென்மையால்
சொல் விட்டு அமர்கிறாள்
பேருந்து புறப்படத் தயாரானது
பேருந்து சாளரத்தை அகற்றி
அவளை ரசித்த நிமிடம்

## என்ன பதில் சொல்லப் போகிறாய்

நான் அடிக்கடி உன் காதில்
வந்து பேசிய வார்த்தைகள்
உன்னிடம் கேள்வி கேட்குமே!...
நீ என் காதலை மறந்தாயென்று

நான் முத்தமிடும் போது
உன் நெஞ்சினில் தொலைபேசியை
அணைத்துக் கொண்டாய் – அந்த
ரீங்காரத்தின் ஊடாக – வந்த
மூச்சுக் காற்று உனை வருடுமே
ஏன் அவனை மறந்தாயென்று...

நான் உனக்காக எழுதிய கவிதைகளை
உன் கிளி விரல்களால்
கடதாசியில் கிறுக்கி
வைத்தாய் – அக்
கவிதையெல்லாம் வந்து
நிற்குமே!
ஏன் இந்த கவிதைக்கு
சொந்தமானவனை
மறந்தாயென்று!

இதயச் செருகேடு மீட்கும் போதெல்லாம்
உன் மனசு ஞாபகப்படுத்துமே
நாம் பேசிக் கொண்ட வார்த்தைகளை.....
அம்சமாய் நடித்துக்கொண்டிருக்கின்றாய்
நினை விழந்ததாக
நான் துடிக்கின்றேனே
உனை அடைவதற்காக

## புரட்டிப் பார்த்த பள்ளி நாள் நினைவுகள்

ஆலயம் சென்று
எம் பிரான் வணங்கி
அரிசில் "அ" எழுத அப்பா மனம்மகிழ
பட்டாடை அணிந்து பள்ளி கூட்டிச் சென்று
பதிவேட்டில் என் பெயர் பதித்து

பார்த்த புது முகம் பழகியதில்லை
பயத்தால் கண்கலங்க
புதுமுக ஆசான்
பாசத்துடன் அமரவைத்து
பாடத்தை தொடர்ந்து

விளையாடக் கூட்டிச்சென்று
வெண்ணிற ஆடை கருநிறமாக
மணியோசை கேட்க
தேவாரம் பாடி வீடு செல்ல
படித்ததை அம்மா வினாவ
செல்ல மொழியால் நான் சிணுங்க
நடந்தது அனைத்தும் புதியது புரியாததாக

வருடங்கள் வந்து
மெல்ல மெல்லக் கடந்து
பழகிய முகங்களாகி
நட்பினைத் தொடர்ந்து
பள்ளித் தோழராய் தோள் கொடுத்து
பருவங்கள் மாறி
பாசத்து உறவுகளாகி
மாணவர்களாக நாம் திகழ்ந்தோம்
ஆண்டிற்கு வரும்
விழாக்களை இனிமையாகக் கொண்டாடி
கமலத்திலிருக்கும் கல்வித் தாய்க்கு
பூசை புனைந்து மனம் மகிழ்ந்தோம்

கற்ற பயணத்தில் பயணிக்க
அறியாததைக் கற்றுக்கொடுத்த
ஆசான் பெருமை கொள்ள
கற்ற சாலை புகழ் பரவ
தாய் தந்தை கனா நனவாக

பரீட்சையில் தோற்றுவித்து
பெறுபேறு கேட்க மனம்
மகிழ்ந்தவர் சிலர்
மனம் நொந்தவர் பலராக
பிரிவுக்குள்ளாகினோம்

பிரியா விடையன்று
உணர்வுகளோடு உறவாடி உண்மையான
நட்பை வெளிக்காட்டும்
நாளன்று
பிரிவதை நினைத்து
கண்ணீர் கசிந்து கன்னங்களில்
ஓடுகிறது

ஆசான், பெரியோர், நண்பன், நண்பியோடு
புகைப்படம் உரு பொறித்து
பள்ளிக்காதலியோடும் புகைப்படம் எடுத்து
கைகுலுக்கிக் கட்டியணைத்து
பிரிவை நினைக்க நெஞ்சம் எரிய
அழமுடியாமல் விக்கித்தவித்து
இதயம் துடி துடிக்க
தவற விடும் நாளை எண்ணி ஏங்கினோம்
எம் பிரிவுடனும் பள்ளிக்காதலும் பிரிந்தது

பார்த்த முகமெல்லாம் கண்ணீர் சொரிய
எம்மீது வைத்த பாசம் புரிய
அழுகையுடன் கைகொடுத்து
நன்றி சொல்லி
சோக விசும்பலுடன்
மீண்டும் கிடைக்காதா என்று
கற்பனை சொல்ல
நடக்காதென்று உள்மனம் உரைக்க
பிரிந்து சென்றோம் பிரிவுச்சுமைகளுடன்

பிரிந்து சென்ற பள்ளி நாட்கள்
நினைவு வர வேம்பு மரத்தின்
கீழ் வேதனையுடன் இருந்தன்று
தேனையொற்ற வந்த
தேனீக்கள் இசைபாட
பள்ளி நாட்கள் நினைவுகளை
புரட்டிப்பார்த்தேன் ஒரு கணம் ....

- 2007.

## இரசனையற்ற இதயம்

குண்டு துளைத்துச்சென்ற வலியாக
வண்டு துளைக்கும் கணம் வரை
வலி தாங்கிய கர்ணன் போன்றும்
காதல் ஞாபகங்கள் தாங்கிய காலம்
உருண்டோடுகின்றது
மீண்டும் அந்த வருகையை மீள்பதிக்கின்றது
வஞ்சனையற்ற இதயம்

வாடி விழுந்த சருகுகள்
தேடி வந்து பாதம் தடவி நினைவை திசைமாற்ற
நினைக்கின்றது
இனிமை விட்டு தனிமையை நாட்டம் காண
அழைக்கின்றது
வீட்டுத்தோட்டம் வெறிச்சோடிக்கிடக்கையில்
குடைபிடித்த மரநிழலில்
நடைப்பிணமாய் நானிருக்கின்றேன்
விட்டுச்சென்ற நினைவுகளை மீட்டபடி

கூவும் குயிலை விரட்டும்
இரசனையற்ற மனம்
தாவும் பார்வைகளில்
அவள் வந்துபோவதாய் தெரிகின்றது
சித்திரைப் புளுக்கம்
நித்திரையை திருடுகின்றது
திண்ணைப் படிக்கட்டில்
அவள் நினைவு வருகின்றது
நடுச்சாமத்தில் எனையறியாத தூக்கம்
நடுமதியம் கண்விழிக்கின்றது
நாட்களோ விரயமாய் கழிகின்றது
விரக்தியில் எரிகின்றது இதயம்
வீணாய்ப் போகின்றது வாழ்க்கை

## இறக்காத என் காதல்

தீராத காதலால்
தீக்கிரையானாலும் உன்
தீரமான பாசத்தால் மீண்டும் புத்துயிர்
பெறுவேன்
ஆறாத சுடு சொல்லாய்
ஆயிரம் காரணம் இருந்தாலும்
அன்று வைத்த பாசம்
அடியோடு சேதாரம் ஆனாலும்
அடியிருந்து அரும்பாய் வருவேன்....

## சொப்பனத்தில் சொர்க்கம் கண்டேன்

ஒரு இராத்திரி கண்ணைக்கசக்கி
புரண்டு படுத்த ஒருகணம்
யாரோ என்னைத் தேடுவது போல
ஒரு உணர்வு
என் ஜீவிதத்தில் காணாத ஒரு உருவம்

என்னை இலட்சணை கண்டு
கழுத்தில் கைப்பட நினைவற்றேன்
கரடு முரடான சுரங்கப்பாதை
அழைத்துச் சென்றது

அழகிய அரங்கம்
அழகிகள் நிறைந்த கூடம்
ஆருயிர் உயிர்பெற்ற உருவம்
விசாரணைக்கூண்டில்
குறை கணிக்க முடியாத் தேவன்
அமர்ந்திருக்க
இரு பக்கம்

மயில்த் தோகைத் தென்றல் வீச
மகுடமணிந்த மகாதேவன்
விசாரணை தொடர
பாவ புண்ணியங்கள் கணிக்க
பூலோக நிகழ்வை காணப் பணிக்க

ஏங்கித்தவிக்கும் உறவுகளும்
தாங்கித்தவிக்கும் பேழையும்
அன்னை மட்டும் நினைவுற்று இருக்க
மாப்பிள்ளை போல அலங்கரிக்கப்பட்டு
மணப்பெண்ணின்றி
ஒப்பாரிகளுடன் உறவுகள்
கசிந்த கண்களுடன்
திசை திரும்ப அரங்கம்

ஒரு தலைமுடி ஏழாகப்பிளந்த பாதை
இரு ஓரங்களில் துடிக்கும் மனிதர்களெல்லாம்
கணவனுக்கு துரோகம் இளைத்த மனைவிக்கு
அக்கினித் தூண்களில் பிணையப்பட்ட நிலை
பலவந்தமாக பாலியல் செய்தோருக்கு
பதை பதைக்க எரியும் நெருப்பில்
பெண்களை ஏமாற்றியோருக்கு
அரக்கிகளோடு திருமணம்

பாவப்பதிப்பிற்கு பிராயச்சித்தம் செய்தோருக்கு
நந்தவனம் காத்திருந்தது
கர்ம வினை இல்லாது
தர்மம் புரிந்தோருக்கு சொர்க்கம் செல்ல
பச்சைத்தேர் காத்திருந்தது
என் தீர்ப்பு அறியமுன்
என் விழி திறந்தது
திடீரென்று எழுந்து திகைத்து நானிருந்தேன்.

## காதலித்து பார்

சிறு பிள்ளை போல் தான் காதலின் உள்ளம்
சிரிக்கின்ற சில வினாடி சிறகடிக்கும் இன்பம்
கை கோர்த்து நடைபயின்றால்
நட்சத்திரம் எம் அருகில் மின்னும்
கண்ணை மூடிக்கொண்டு வானவில் தொடுவாய்
கட்டித் தழுவலில் கனவுகள் பலிக்கும்

- மலேசியாவில் மன்னன் மாத இதழில்
பிரசுரமான கவிதை, 2015.

## காதலர்கள்

மனசு பரிமாறும் பவித்திரமான
பாச வெளியீடு
இதய இடைவெளியில்
கவிதை நிரப்பி
மலர் செண்டுகள் நீட்டி
மனதை திறக்கும்
மங்கள நிகழ்வு காதல்
வாழ்ந்து பார்ப்போமென்று
புறப்பட்டுப் போனோர்
இன்னும் திரும்பவேயில்லை
இந்தக் காதலர்கள்.......
அறியாத ஆண்களும்
புரியாத பெண்களும்
மாறாத மனிதனாலும்

## படித்துச் செல்கிறாள்

பள்ளியடி சந்தியில்
பேருந்தை பார்த்து நிற்கையிலே!
பள்ளி சென்ற பருவப் பொண்ணு
பார்வையால் படித்துச் செல்கிறாள்!
தனியார் வகுப்பு போகும் போதும்
தன்னம் தனியாய்
நான் போகையிலே!
மெல்லிய சிரிப்பால்
படித்து செல்கின்றாள்!
வகுப்பறையில்
நல்லா படிப்பாள் போல!

## என் மனதுக்குப் பிடித்த தேவதை

என் மனதுக்குப் பிடித்த தேவதை
இவள் கவரி மானின் பரம்பரை
தண்ணீரில் பூக்கும் செவ்வெண் தாமரை
என்றும் இவள் எனக்குப் பிடித்த இளம்பிறை
அருகில் வந்தாலே ஆலய வாசம்
கட்டியணைத்தால் தேவ கன்னிகை யாசம்
பிரிந்து போனாலே நான்
எரிந்து போவேனே !

## நீ என் கடவுளாகிறாய்!

உன் பாசத்தில்
முகம் புதைத்த போது
நீ என் தாயானாய்!

என் மடியில்
மர்ம சிரிப்பில் தூங்கிய போது
நீ என் சேயானாய்!

என் மார்பில் – நீ
சாய ஆசை என்ற போது
நீ என் காதலி ஆனாய்

நாம் இருவரும் கனவில்
இறுக அணைத்துக் கொண்டு
இன்ப துன்பம் பகிர்ந்த போது
நீ என் மனைவியானாய்!

என் வாழ்வில்
எல்லாவற்றையும் விட
பாசமுள்ள தேவதையாய்
வந்த போது
நீ என் கடவுளாகிறாய்!

## மரணம்

வலிகளை வார்த்தையால் வரைந்தால் கவிதை
வலிகளைதினம் தினம் எண்ணி உருகினால் துன்பம்
நினைவுகளை மீட்டு இன்பமாக வாழ்தல் கனவு
உலகை விட்டு எல்லாவற்றையும்
மறந்து செல்வது மரணம்

## என் காதல் புரிகின்றதா ?

பிரம்மா அனுப்பி வைத்த
பிரமாண்டம் நீ

பிடிவாதம் கொண்டு வந்த
சிறு பிள்ளை நீ

தோன்றவில்லை உன்னை
பிரிந்திருப்பதற்கு

புரிகின்றதா என்னுள்
கலந்திருப்பது காதலென்று...

## சாமரங்கள் வீசாது

எட்டாத தூரத்திலிருந்து
ஏகாந்தம் வீசியவளே!

உன்னை மறப்பதென்றாலும்
மறு ஜென்மம் போதாது

நீயின்றி செல்கையில்
சாமரங்களும் வீசாது

## அநாகரிகம்

எங்கள் நாட்டுப் பெண்களும்
மேலைத்தேய நாட்டுப் பெண்களைப் போலவே
மிச்சம் பிடிக்கத் தொடங்கி விட்டார்கள்
உடுத்தும் ஆடைகளில்

-தமிழகத்தில் வெளிவரும் பாக்யா வார இதழில்
பிரசுரமானது, 2015.

## நீ மட்டும் போதும்

சொந்தமென்று சொல்ல
நீ மட்டும் போதும்
துன்பங்களில் தாங்கிக்கொள்ள
உன் பாசம் போதும்
இன்பங்களில் கலந்து கொண்டு
நீ புன்னகைத்தால் போதும்
கடைசி மூச்சு நிற்கும் போது
உன் மடி தந்தால் போதும்

## கொள்ளை ஆசையடி

வானவில் விரித்து போர்வையாய் உடுத்து
உறங்கிட ஆசையில்லை
உன் மடி மீது தலைசாய்த்து
மௌனமாய் உறங்கிட ஆசையடி!

விண்மீன்கள் மீட்டு
வீடெல்லாம் விட்டு
ஒளியை இரசிக்க ஆசையில்லை
உன் கண்கள் பார்க்க
பட்டென்று மூடித்திறக்கும்
இமையை இரசிக்க ஆசையடி!

பூ மீது தேனையொற்றும்
வண்ணத்துபூச்சியைப் பார்க்க
ஆசையில்லை
உன் உதட்டின் கீழ்
பூத்துக்குலுங்கும் மச்சங்களை
பார்த்து இரசிக்க ஆசையடி!

-மன்னன் இதழ் மலேசியா.

## கண்ணீர்

ஒரு ஆணின் வியர்வை சம்பாதிக்காததை
ஒரு பெண்ணின் அழுகை சம்பாதித்து விடும்.

**(தமிழகத்தில் வெளிவரும் பாக்யா வார இதழ் பிரசுரமனது 2015)**

## தேடல் தொடர்வோம்

எண்ணக்கதிர்கள் எனக்குள்ளிருந்து
முட்டி மோதி எழுந்தன
வண்ணக்கதிர்களாய் காகிதத்தில் படிந்தன
முற்றத்தின் கோணலாய் கறுப்பு நிலா
பருவத்தின் இருப்பிடமானது
ஆசைகள் ஊஞ்சலாட
வார்த்தைகள் துளிர்விடலாகின
அவலக்குரல்கள் உதிர்ந்து ஏடாகின.

பெட்டகத்தினுள் பேணி வைத்த
காவியங்கள் பெருச்சாலியின் உணவாகின
இலக்கிய வாதிகளால் மீண்டும் உயிராகின
இனத்தின் மீது அலாதியான காதல்
இதயவனத்தில் ஒப்பாரிகள்
இன்னல் நிறைந்த வார்த்தைகளாகி
இடைவிடாது உதிர்ந்து கொண்டிருக்கின்றன
இனிமை பெற இலக்கிய வாதிகளாய்
உயிர் பெறுவோம்....



# நூலாசிரியரைப் பற்றி கவிஞர் வேதிகாவின் எண்ணப்பதிவு

இலக்கிய வானின் புதியதோர் உதயமாய் கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மாவட்டத்தில் பாரம்பரியத்தின் பெரும் நிலப்பரப்பான படுவான்கரைப் பிரதேசத்தில் மாலையடிப் பிள்ளையாரும் கண்ணகை அம்மனும் அருள் ஒளி வீசுகின்ற முதலைக்குடா ஊரிலிருந்து தன் கவிக்கதிர்களை பரப்பி உலகெங்கும் ஒளி வீச மெல்ல முகில் விலக்கி உதயமாகிறார் மட்டுநகர் கமல்தாஸ் அவர்கள்.

அற்புதராஜா கமல்தாஸ் அவர்களுக்கு கல்வி புகட்டிய ஆலயம்
மட்/ முதலைக்குடா மகா வித்தியாலயம்.
மலேசியாவிலிருந்து வெளியாகும் மன்னன் இதழ்.
இந்தியாவிலிருந்து வெளிவரும் பாக்யா இதழ்.
இலங்கையிலிருந்து வெளிவரும் வீரகேசரி நாளிதழ், தினக்குரல், சுடர் ஒளி போன்றவற்றிலும் சூரியன் பண்பலையிலும், 2007 இற்கு முன்னர் சக்தி பண்பலையிலும், முகநூல் போன்ற சமூக வலைத்தளங்களிலும் தனது கவியாற்றலை வெளிப்படுத்திய இவர் தனது சிந்தனைகளை ஆவணமாக்கும் முயற்சியாக இந்த நூலினை உருவாக்கியிருக்கிறார்.

தமிழ் இலக்கிய உலகில் புதியதொரு சொந்தம் இணைவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைவதோடு இவரது கவிப்பயணம் வெற்றி பெறவும் தமிழ் தொண்டு தொடரவும் சாதனைகள் படைக்கவும் வாழ்த்துகிறேன்.

நன்றி
**பிரபாகரன் வேதிகா**
வவுனியா

ISBN 9789553849304

ரூபா 300/-

ஷெரோணி பிரிண்டர்ஸ் - கூழாவடி, மட்டக்களப்பு. 065-2228660